பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 03 ஞாயிற்றுக்கிழமை 16.04.2023 கதிர்157

## குறிகாட்டுவான் இறங்குதுறையில் வீதியின் நடுவே அரச மரம் நடுகை

### பண்ணையில் அம்மன் சிலையை அகற்ற பொலிஸ் தீவிரம்

குறுகட்டுவான் இறங்கு துறையில் வீதியின் நடுவே கடற்படையினரால் அரச மர மொன்று திடீரென நடப்பட்டுள்ளது. கடந்த பல நாட்களாக மறைக்கப்பட்டிருந்த இந்த அரசமரமும் அதற்கான கட்டுமானமும் சனிக்கிழமை திறந்து விடப்பட்டது. இதேவேளை, யாழ்ப்பாணம் பண்ணைச் சுற்றுவட்டப் பகுதியில் வைக்கப்பட்ட நயீனை நாகபூசனி அம்மன் உருவச்சிலையை அங்கிருந்து அகற்றுவதற்கு யாழ்ப்பாணம்பொலிஸார் தீவிரம் காட்டி வருகின்றனரர் என்று உருத்திர சேனைஅமைப்பினர் குற்றஞ்சாட்டினர். ☞2



## மே தினக் கூட்டங்கள் இம்முறை பிரமாண்டம்

### பிரதான அரசியல் கட்சிகள் ஏட்டிக்குப் போட்டி

மே தினப் பேரணிகளையும், கூட்டங்களையும் இம்முறை ஏட்டிக்குப் போட்டியாகப் பிரமாண்டமாக நடத்துவதற்குப் பிரதான அரசியல் கட்சிகள் தீர்மானித்துள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை இவ்வாரம் முதல் தீவிரப்படுத்துமாறு ஏற்பாட்டுக்குழுக்களுக்குக்கட்சித் தலைமைகள் கட்டளையிட்டுள்ளன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, ஐக்கியதேசியக்கட்சிஎன்பன கொழும்பை மையப்படுத்தியே மே தினக் கூட்டங்களையும், பேரணிகளையும் நடத்தும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

அத்துடன், தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப் புக்களின் நிகழ்வுகளும் கொழும்பிலேயே நடைபெறவுள்ளன. (02)

## இது ரகசியம் அல்ல!

அரசனை நம்பி புருசனைக் கைவிட்ட கதை என்கிற பழமொழி ஒன்றுண்டு. நேற்றைய எனது நிலையும் அப்படியே அதுதான். யாழ்ப்பாணம் முற்றவெளியில் பாரம்பரிய உணவுத் திருவிழா ஏற்பாடு என்று அறிவித்திருந்தார்கள். சித்திரைப் புத்தாண்டுக்குஅடுத்தநாள், அதுவும்உணவுத் திருவிழாபோனால்ஒருபிடிபிடிக்கலாம்என்ற ஆர்வதோடுபோனேன். கடைசியில்நொந்து நூடில்ஸ் ஆனதுதான் மிச்சம். அதைவிடக் கொடுமை மலாயன் கபேயில் மிஞ்சியதைத் தின்றுவிட்டுத் திரும்பவேண்டியிருந்தது என்பதுதான்.

நேற்றும் இன்றும் இந்தப் பாரம்பரிய உணவுத் திருவிழா யாழ். மாவட்டச் செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதற்கு முன்னரும் தரைப் படையினர் உள்ளிட்ட சில பல தரப்புக்கள் உணவுத் திருவிழாக்களை யாழ்ப்பாணத்தில் நடத்தியிருந்தன. அவற்றின் ☞2

## ஈஸ்டர் தாக்குதல்களுக்கு நீதி கோரி ஆர்ப்பாட்டம்

### ஆஸ்திரேலியாவில் இலங்கையர்கள் நடத்தினர்




உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுக்கு நீதி கோரி ஆஸ்திரேலியாவில் வசிக்கும் இலங்கையர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ☞2

## நல்லூரில் இன்று போராட்டம்

''தமிழர் எம் மரபுரிமைகள் பாதுகாப்போம்'' என்ற தொனிப் பொருளில் அடையாளஉணவுதவிர்ப்புப் போராட்டமும் தமிழர் தாயகம் தழுவிய மாபெரும் கையெழுத்து வேட்டையும் இன்று காலை 9 மணிக்கு நல்லூர் நல்லை ஆதீன முன்றலில் நடக்கவுள்ளன.

5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து சமயத்தலைவர்கள், தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள், பொதுஅமைப்புக்கள், தொழிற் சங்கங்கள், பல்கலைக்கழக சமூகத்தினர் எனபலருடைய ஒத்துழைப்புடன் இந்த அடையாள உணவு தவிர்ப்புப்போராட்டம்நடத்தப் படுகின்றது.

தமிழர்மரபுரிமைகளை அழியவிடாது பாதுக்காக்க இந்தஎழுச்சிப்போராட்டத்தில் பேதங்களைக் கடந்து தமிழராக அனைவரும் ஒன்றுபட்டு தமிழனத்துக்கு ☞2

## எக்ஸ்பிரஸ் பேர்ள் விபத்தின் இழப்பீட்டில் லஞ்ச மோசடி

### விசாரணை கோருகின்றார் நீதி அமைச்சர்

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தால் இலங்கைக்கு ஏற்பட்ட பேரழிவுகளுக்கான இழப்பீட்டைப் பெறும் விவகாரத்தில் லஞ்சம்பெறப்பட்டுள்ளதாகக்கிடைத்துள்ள முறைப்பாடு தொடர்பில் விசாரணைகள் தொடங்கப்படவுள்ளதாக நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்தலஞ்சக்குற்றச்சாட்டுத்தொடர்பான தகவல்களைப் பொலிஸ் மா அதிபரின் கவனத்திற்கு கொண்டு சென்றதோடு விசாரணை நடத்துமாறு கோரியுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அரச தொலைக்காட்சியின் நேர்காணல் நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எக்பிரஸ் பேர்ள் பேரிடர் சம்பந்தமாக மேத்தா நிறுவனம் முழுமையான பொறுப்பினை ஏற்றுக்கொள்ளவேண்டும். வழக்குத் தாக்கல் செய்யும் செயற்பாடானது சட்டமா அதிபர் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படவேண்டும். பல்வேறு காரணகளால் இந்த விடயங்களில் இழுத் தடிப்பு தொடர்கிறது.

இதனையடுத்தே நான் தலையீடுகளைச் செய்தேன். வழக்குத்தாக்கல்செய்வதற்கான அறிக்கைகளை வழங்காதிருந்தனர். இந்த நிலையில் கடந்த ஆண்டின் செப்டெம்பர் 23 இறுதியான திகதி என்று வரையறுத்தேன். எனினும் அந்த அறிக் கைகள் வழங்கப்படவில்லை.

இந்த ஆண்டின் ஜனவரியில் தான் ☞2

## இலங்கையர் உள்ளிட்ட 2 பேர் இந்தியாவில் நேற்றுக் கைது

விமானப் பயணச்சீட்டுக்களைப் பரிமாற்றிக்கொண்ட குற்றச்சாட்டில் இலங்கையர் உள்ளிட்ட இருவர் இந்தியாவின் மும்பையில் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

போலி விமானப் பயணச்சீட்டுக்களைப் பயன்படுத்தி பயணித்த இலங்கையர் ஒருவரும், ஜேர்மனியில் இருந்து சென்ற ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அவர்கள் இருவரும் விமான நிலையத்தில் இருந்து இலண்டன் மற்றும் காத் மண்டு நோக்கிப் பயணிப்பதற்குத் தமது விமானப் பயணச்சீட்டுகளைப் பரிமாற்றிக்கொண்டமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (02)

### ஈழத் தமிழர்களிடையே

## மதப் பகைமையை உருவாக்கி பிளவு ஏற்படுத்த திட்டமிட்ட சதி

### நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் குற்றச்சாட்டு

-எஸ்.நிதர்ஷன்-

ஈழத் தமிழினத்திற்குள் மதரீதியாகபகைமையைஉருவாக்கி பிளவுகளை ஏற்படுத்தும் திட்டமிட்ட சதி நடவடிக்கைகள் அரங்கேற்றப்பட்டு வருவதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலைவர்களில் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதனால் எதிர்காலத்தில் பெரும் ஆபத்துக்கள் ஏற்படுமெனவும் இதனைத் தடுத்து நிறுத்த வேண்டுமெனவும் ஈழத்தமிழ் இனத்திற்கு அவர் அழைப்பு விடுத்துள்ளார். தமிழர் தேசமாக ஒன்றுபட்டு ஓரணியில் செயற்பட வேண்டுமென்றும்வலியுறுத்தினார்.

யாழ். கொக்குவிலில் உள்ள தமது கட்சி அலுவலகத்தில் சனிக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஈழத் தமிழினத்திற்குள் மதரீதியாகவும்சாதிரீதியாகவும் பிளவுகளை ஏற்படுத்தும் சதி நடவடிக்கைகள் திட்டமிட்ட வகையில்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்தகைய நடவடிக்கைகளின் பின்னால் பல தரப்பினரதும் திட்டமிட்ட சதி காணப்படுகின்றது. இதனைத் தமிழர் ☞2

### சபாநாயகர் தலைமையில்

## கட்சித் தலைவர்களுக்கான சிறப்புக் கூட்டம் ஏப்ரல் 20

விசேட கட்சித் தலைவர்கள் கூட்டம் ஏப்ரல் 20 நடைபெறவுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில், அன்றைய தினம் முற்பகல் 11 மணிக்கு கட்சித் தலைவர்கள் கூட்டம் இடம்பெறவுள்ளது என்று நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

புத்தாண்டின் பின்னர் நடைபெறவுள்ள முதலாவது கட்சித் தலைவர்கள் கூட்டம் இதுவாகும். ☞2



## புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஊடக சுதந்திரத்துக்கும் அச்சுறுத்தல்

### சர்வதேச, உள்ளூர் ஊடக அமைப்புகள் கண்டனம்

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஊடக சுதந்திரத்திற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதாக சர்வதேச மற்றும் உள்நாட்டு ஊடகவிலயாளர் அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

சர்வதேச ஊடகவியலாளர்களின் சம்மேளம், இலங்கை உழைக்கும் பத்திரிகை யாளர்கள் சங்கம், ☞2

## ஈ.பி.எவ்., ஈ.ரி.எவ். இல் கை வைக்கிறது அரசு

### வசந்த சமரசிங்க குற்றச்சாட்டு

தற்போதைய ஆட்சிவரிகளை அதிகரித்து மக்களின் சுமையை அதிகரித்தது மட்டுமல்ல ஊழியர் சேமலாப நிதி (ஈபிஎவ்), ஊழியர் நம்பிக்கை நிதி (ஈரிஎவ்) ஆகியவற்றிலும் கைவைக்க நடவடிக்கை எடுத்துள்ளது. பணத்துக்காக குரங்குகளை மட்டு ☞2

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அனைவருமே எதிர்க்க வேண்டும்

### கஜேந்திரன் எம்.பி. வலியுறுத்து

எஸ்.நிதர்ஷன்

இன்றைய ஆட்சியாளர்கள் கொண்டு வரவிருக்கின்ற புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மிகவும் கொடுரமானது என்பதால் அதனை அனைவருமே எதிர்க்கவேண்டும்எனதமிழ்த் தேசியமக்கள்முன்னணியின் தலைவர்களில் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் வலியுறுத்தினார்

யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர்இதனைத்தெரிவித்தார். இதுதொடர்பில்அவர்மேலும் தெரிவித்ததாவது:

பயங்கரவாத தடைச் சட்டத்தைபயன்படுத்திதமிழ் மக்கள் மீது கொடுரமான ஒடுக்குமுறைகளை இந்த நாட்டில் மாறி மாறி ஆட்சிக்கு வந்ததரப்புக்கள் அரங்கேற்றி வந்திருக்கின்றன. பல்லாயிரக்கணக்கான இளைஞர் யுவதிகள் பல்வேறு சித்திரவதைகளுக்கு உள்ளாக் கப்பட்டதுடன் சொத்துக்களும் சேதமாக்கப்பட்டிருக்கின்றன.

அதிலும் இந்தச் சட்டத்தின் கொடுரத்தினால் சொந்த ஊரை மட்டுமல்ல நாட்டை விட்டுக்கூடப் பலர் வெளியேறிச் சென்றிருக்கின்றனர். இவ்வாறு தமிழ் மக்களுக்கு எதிராக பயன்படுத்தப்படும் இந்தச் சட்டம் நீக்கப்பட வேண்டுமென்பதே எமது கோரிக்கை. ☞2

## அனலைதீவுக் கொள்ளை 2 சந்தேகநபர்கள் கைது



கனடாவிலிருந்துவருகை தந்து அனலைதீவில் தனது வீட்டில் தங்கியிருந்த வயோதிபரைத் திட்டமிட்டுக் கொலை செய்ய முயற்சித்தமை மற்றும்பெறுமதியான பொருள்களைக் கொள்ளையிட்டமை தொடர்பில் முதன்மை சந்தேகநபர் உள்ளிட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கனடாவிலிருந்துபணம் அனுப்பப்பட்டு இந்தியாவிலிருந்த ஒருவரால் வழங்கப்பட்ட நட்புரீதியான கட்டளைக்காக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகச் சந்தேகநபர்கள் வாக்குமூலம் வழங்கியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொள்ளை தொடர்பில் பருத்தித்துறையைச் சேர்ந்த 32 மற்றும் 24 வயதுடைய இருவரே சனிக்கிழமைகைது செய்யப் பட்டனர். ☞2

## மக்களை ஒடுக்கும் அரசுக்கு எதிராக ஒன்றாக எழுவோம்!

### - சஜித் அறைகூவல் -

மக்களின் ஜனநாயக உரிமைகள், அடிப்படை உரிமைகள், மனித உரிமைகள் அப்பட்டமாகமீறப்படுகின்றன. அரசின் இந்தக்கொடுங்கோல் ஆட்சிக்கு எதிராகப் போராட இன, மத, சாதி பேதமின்றி சிவில் அமைப்புக்களும், பிரஜைகளும் ஒன்றாக அணி திரள வேண்டும்.

இவ்வாறு அறைகூவல் விடுத்தார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ. அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களுக்குப் பயந்த, மக்கள் அபிப்பிராயத்தை ஊசலாட்டும் திறமையற்ற தற்போதைய அரசு 24 மணிநேரமும் 365 நாட்களுமாகத் தேர்தலை நடத்த விடாமல் தடுக்கும் நிலைக்கு



தள்ளப்பட்டுள்ளது.

தற்போதைய ஜனாதிபதி தலைமையிலான அரசு தேர்தலை எதிர்கொள்ளும் அச்சத்தால் தேர்தலுக்கு ஒதுக்கப் பட்ட பணத்தை ☞2

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிடத்தகுந்த சிறப்பான செயற்பாடுகள் காரணமாக உணவுத்திருவிழாவிற்குள ஒரு எதிர்பார்ப்பு இருந்தது. அதுவும் கொண்டாட்ட தினத்துக்கு அடுத்த நாளில் ஒரு உணவுத் திருவிழா என்கிறபோது எதிர்பார்ப்பு இன்னனும் அதிகமாக இருந்தது.

அந்த எதிர்பார்ப்போடு தான் நானும் உணவுத் திருவிழாவிற்குப் போனேன். சும்மாவேஉணவுத்திருவிழா என்றால் விதம் விதமாக உணவுகள் இருக்கும் என்பது ஒரு எதிர்பார்ப்பு. அதிலும் பாரம்பரிய உணவுகள் என்ற தால் எதிர்பார்ப்பு இரட்டிப்பாக இருந்தது. நான்வேறு கொட்டடிப் பக்கம் இருந்து உணவுத் திருவிழா நடந்த பண்ணைப் பக்கமாகச் சென்றேனா, போகும் வழி யெல்லாம் வீதியின் இருமருங் குகளிலும் கார்கள் அடுக்கி விடப்பட்டிருந்தன.

அவற்றைப் பார்த்த மாத் திரத்தில் உணவுத் திருவிழா களைகட்டுகிறது, இன்றைக்கு எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை ஒரு பிடிபி டித்துவிடவேண்டும் என்று வாயில் எச்சிலூற உள்ளே நுழைந்தேன். நான் சென்றது இரவு 7.30 மணிக்கு. திருவிழா பிற்பகல் 2 மணியிலிருந்து 9 மணி வரை இருக்கும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. நான் போனது கணக்கான நேரமாக இருக்கும் என்கிற கணிப்பில் போனேன்.

இரட்டை எதிர்பார்ப்புடன் உள்ளே போன எனக்கு மிஞ்சியது இரண்டு. ஒன்று ஏமாற்றம் மற்றையது காசு. பாரம்பரிய உணவுத் திருவி ழாவில் போடப்பட்டிருந்த உணவுக்கடைகளில் சமைத்த உணவு விற்கப்பட்ட கடைகள் மிகக்குறைவானவை. கச்சான் அல்வாவும் சுவையூட்டப்பட்ட தேயிலையும் எப்போது பாரம்பரிய உணவுக்குள் புகுந் தன என்று இப்போதும் மண் டையைப் பிய்த்துக் கொண் டிருக்கின்றேன்.

ஒரு கடையில் புட்டும் இறைச்சிக் கறியும் என்று போட்டிருந்தார்கள். விலை 800 ரூபாய். கொஞ்சமாகத்தான் கொடுத்தார்கள். அது பரவா யில்லை. இத்தகைய திரு விழாக்களில் அதுதான் வழக்கம். ஆனால் இருந்தது கல்போட் இறைச்சிக் கறி. அதாவது முட்டையிட்டு ஓய்ந்த கோழியின் கறி. இந்த வகைக் கோழிகள் எப்போது பாரம்பரிய உணவில் சேர்ந்தது என்பதும் எனக்குப் புரியவில்லை. புட்டுப் பாரம்பரிய உணவு, சரி. அதனோடு ஊர்க்கோழிக் குழம்பு கொடுத்திருந்தால் அதையாவது பாரம்பரிய உணவு என்று ஏற்றுக்கொண் டிருக்கலாம்.

இட்டலி, தோசை, பூரி இவைகள்தான் மற்றைய கடைகளில் கிடைத்த உண வுகள். இவையெல்லாம் யாழ்ப்பாணத்துப் பாரம்பரிய உணவுகளில் எப்போது சேர்ந்தது என்பதும் தெரிய வில்லை. சரி போகட்டும் அவை தமிழரின் பாரம்பரிய உணவுகள் என்கிற வகை யில் அவற்றையாவது மன் னித்துவிட்டுவிடலாம். உணவுத் திருவிழா என்று அறிவித்துவிட்டு பனங் கட்டியையும் புளுக்கொடி யலையும் வைத்து விற்றால் எதைத்தான் வாங்கி உண் பதாம்.

கடைசியில் வந்ததற்கு ஆறிப்போன கரஞ்சுண்டல் ஒன்றை வாங்கிக் கொண்டு நான் அங்கிருந்து புறப்பட்டேன். என்னைப் போலவே பலரும் ஏமாற்றத்துடன் குடும்பம் குடும்பமாக, அதுவும் சிறு குழந்தைகளுடனும் பலர் வந்திருந்தார்கள், திரும்பிக் கொண்டிருந்தார்கள். பார்க்கப் பாவமாக வேறு இருந்தது. நேற்றுப் பார்த்தது மச்சக் கடைகள் எல்லாம் பூட்டு வேறு கடைசியில் வேறுவழி. மலாயன் கபேதான் தஞ்சம்.

அற்புதமான ஒரு சந்தைக் களத்தை முற்றிலுமாக வீணடித்திருக்கிறார்கள். பகல் போதில் நிலமை எப்ப டியிருந்தது என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால், நான் சென்ற முன்னிரவில் அந்த வீதியின் இரு மருங்கும் சுமார் 50க்கும் குறையாத கார்கள் அடுக்கி நின்றன. நூற்றுக்கணக்கான மோட்டார் சைக்கிள்களும் நின்றன. அதாவது உயர் நடுத்தர மற்றும் நடுத்தர வர்க்க நுகர்வோர் அங்கே கூடியிருந்தனர். கொண்டாட்ட மனோநிலையோடு கூடி யிருந்த அவர்கள் அங்கே தாராளமாகப் பணத்தைச் செல வழித்திருப்பர் அவர்களுக் குப் பிடித்த உணவுகள் இருந்திருந்தால். ஆனால் அந்தச் சந்தை வாய்ப்பை தெரிவுகளற்ற உணவுத் திருவிழா மிகமோசமாகப் பாழடித்திருந்தது.

யாழ்ப்பாணம் கடலால் சூழப்பட்ட பகுதி. கடலுணவுகள் எமது பாரம்பரிய உணவின் முக்கிய பகுதி. ஒரு மீன் பொரியல் கூட உணவுத் திருவிழாவில் இல்லை. குறைந்தது மணத்துக்காவது ஒரு கருவாட்டுக் கடை தன் னும் இல்லை. இங்கே ஊருக்கு ஊர் புகழ்பெற்ற உணவுகள் பல உண்டு. இங்கே அவற்றை அறிமுகப்படுத்தியிருக்கலாம். முக்கியமாக நாம் மறந்துபோன சிறுதானிய உணவுகளைக் கொஞ்சமாவது வர்த்தகமயப் படுத்தியிருக்கலாம். ஆட்டி றைச்சிக் கறி தமிழர் கொண் டாட்டத்தின் ஓர் அங்கம் . அதற்கு ஏதாவது ஏற்பாடு செய்திருக்கலாம்.

இப்படி எதுவும் இல்லை. முதலில் அம்மாச்சி உணவ கங்களையும் செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட தொழில் முனைவோரையும் மட்டும் வைத்துக்கொண்டு ஒரு உணவுத் திருவிழா நடத்த முற்பட்டிருப்பது நிகழ்ச்சித் திட்டத் தயாரிப்பாளர்களின் பெரும் குறையை வெளிப் படுத்துகின்றது. நன்கு திட்ட மிட்டு, சிறப்பாகச் செய்திருந் தால் அது ஒரு பெருந் திரு விழாவாகக் களைகட் டியிருக்கும் வருடாந்தம் ஒரு பெரும் சந்தை வாய்ப்பை உருவாக்குவதாக அமைந்தி ருக்கும். ஆனால், எல்லாவற் றையும் சொதப்பிவிட்டார்கள். சந்தையை நுகரும் அனு பவிக்கவும் மக்கள் தயாரா யிருக்கிறார்கள். அதனைப் பயன்படுத்திக்கொள்ள சரியான ஏற்பாடுகள் இல்லையாயின் மொத்தமும் பாழ்.

ஆளுநரையும் உயர் அதிகாரிகளையும் திருப்திப் படுத்துவது உணவுத் திருவி ழாவின் நோக்கமாக இருக்கக் கூடாது எதிர்பார்த்து உண்ண வருபவர்களைத் திருப்திப் படுத்தும் நோக்கத்தோடு அது தயாரப்படுத்தப்படவேண்டும். நேற்றைய திருவிழாவில் அது மிஸ்ஸிங். முடிந்தால் இன்றாவது கொஞ்சம் திருத்தப் பாருங்கள்.

**இடிமின்னல்**

## நல்லூரில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிராக இடம்பெறும் செயற் பாடுகளை கண்டிப்பதுடன், எமது நியாயமான கோரிக் கைகளை அரசுக்கும் சர்வ தேசத்துக்கும் தெரியப்படுத்த வேண்டும் என ஒருங்கி ணைந்த தமிழர் கட்டமைப்பு என்கிற புதிய அமைப்பு வேண்டி நிற்கின்றது.

## அனலைதீவுக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெப்ரவரி 23, அன லைதீவில் வீடு புகுந்த வன் முறைக் கும்பல் அங்கு வசித்த கனடாவைச் சேர்ந்த இருவ ரைத் தாக்கிக் காயப்படுத்தினர். அவர்களிடமிருந்த கடவுச் சீட்டுக்களையும் 4 பெறும தியான அலைபேசிகள் மற் றும் 4 வலையல்கள் உள் ளிட்ட 13 லட்சம் பெறுமதியான பொருள்களையும் கொள்ளை யிட்டன.

சம்பவத்தில் கனடா குடி யுரிமை பெற்றவர்களான அனலைதீவைச் சேர்ந்த நாகலிங்கம் சுப்ரமணியம் (குருசாமி வயது 75) என்பவர் கால்கள் அடித்து முறிக்கப்பட்டு படுகாயமடைந்தார். அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பின்னர் கனடா மருத்துவமனைக்கு மாற் றப்பட்டார். அவரது மனைவி யும் சிறு காயங்களுக்கு உள்ளாகியிருந்தார்.

சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் யாழ்ப் பாணம் பிரதிப் பொலிஸ் மா அதிபர் மஞ்சுள செனரத்தின் உத்தரவில் யாழ்பபாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் உப பொலிஸ் பரிசோதகர் பிரதீப் தலைமையிலான மாவட்ட குற்றத்தடுப்புப் பிரி வினரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

கடந்த மாதம் அரியாலை பூம்புகாரைச் சேர்ந்த 21 வயது டைய ஒருவர் கைது செய்யப் பட்டு நீதிமன்றின் உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப் பட்டார். மேலதிக விசாரணை களில் பருத்தித்துறையைச் சேர்ந்த 32 வயதுடைய முதன்மை சந்தேகநபர் மற் றும் 24 வயதுடையவர் என இருவர் கைதுசெய்யப்பட்டனர்.

கனடாவில் உள்ள ஒருவர் இந்தியாவில் வசிக்கும் ஒருவர் ஊடாக இந்தத் தாக்குதலை ஒருங்கிணைத்தார் என்று முதன்மை சந்தேக நபர் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

'இந்தியாவில் வசித்த வரதன் என்பவர் மாரடைப்பு காரணமாக உயிரிழந்து விட்டார். அதனால் திட்ட மிட்டபடி எதுவுமே செய்ய முடியவில்லை.

வேலணைக்குச் சென்று மீன்பிடிப் படகை வாடகைக்கு அமர்த்தி அனலைதீவு சென்று தாக்குதல் நடத்தி னோம். நகைகள் மற் றும் அலைபேசிகளை எடுத்துக்கொண்டு தப்பி வந்து விட்டோம்' என்று முதன்மை சந்தே நபர் வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளார்.

சந்தேகநபர்கள் இருவரிட மிருந்தும் கொள்ளையிடப் பட்ட தங்க வலையல்கள் மற்றும் மோதிரங்கள் கைப் பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் ஊர்காவற் றுறை நீதிமன்றில் இன்று முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## மதப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசமாக நாங்கள் தடுத்து நிறுத்தவேண்டியது மிக மிக அவசியம்.

சாதி மத ரீதியான வேற்று மைகள் இல்லாமல் நாங்கள் அனைவரும் ஒற்றுமையாக வாழ்கின்றபோது மத ரீதியான பகைமைகள் ஏற்படுத் தப்படுவது எதிர்காலத்தில் தமிழினத்திற்கே மிகவும் ஆபத்தாக அமையும்.

முன்னொரு காலத்தில் முஸ்லீம் மக்களும் தமிழர் களாகவே தங்களை அடைய ளாளப்படுத்தி தமிழர்களாக இருந்தனர். ஆனால் இந்த நாட்டின் ஆட்சிக்கு வருகின்ற சிங்கள பௌத்த பேரினவாத ஆட்சியாளர்கள் தமிழர்கள், முஸ்லிம்கள் என மத ரீதியாக பகைமையை ஏற்படுத்தி ஒன்றாக இருந்தவர்களை பிரித்தனர்.

அதே போன்றே இரத்தமும் சதையுமாக ஒரு தாய் பிள்ளைகளாக வாழு கின்ற கிறிஸ்தவர்களுக்கும் சைவர்களுக்கும் இடையிலே பகைமைகளை ஏற்படுத்தும் சதிகள் மிகத் தீவிரமாக அரங் கேற்றப்படுகின்றன.

இந்த விடயத்தில் நாங்கள் விழிப்படைந்து கொள்ளவில்லை எனில் இன்னும் ஓரிரு ஆண்டு காலத்திலே சாதி வெறி தலைவிரித்தாடும். கடந்த பல வருடங்களுக்கு முன் னராக இருந்த இந்த சாதி பிரச்சனைகள் விடுதலைப் போராட்ட காலத்திலே ஒழிக் கப்பட்டு சமத்துவம் ஏற்படுத் தப்பட்டிருந்தது.

தமிழீழ விடுதலைப்புகள் இயக்கம் வளர்ச்சி அடைந்த பிற்பாடு இந்த சாதி மற்றும் மதப் பிரச்சினைகள் உட்பட பிரதேச வேறுபாடுகள் ஒழிக் கப்பட்டு அனைவரும் ஒற்றுமையாக ஒருதாய் பிள்ளைகளாக வாழுகின்ற நிலைமை உருவாக்கப்பட்டது.

போர் முடிந்து 13 ஆண்டுகளுக்கு பிற்பாடு இந்தியாவிற்கும் சர்வதேச சக்திகளினதும் இலங்கை அரசினதும் எடுபிடிகளாக, முகவர்களாக செயற்படக் கூடியவர்களைக் கையா ளும் முயற்சிகள் இன்று தோல்வியடைந்து வரு கின்ற நிலையில் தமிழர் களுக்குள் நிரந்தர பிளவை ஏற்படுத்துவதற்கான சதி அரங்கேற்றப்படுகிறது.

இந்த விடயத்தில் எங்களுடைய மக்கள் விழிப் பாக இருக்கவேண்டும் இந்தச் சதி நடவடிக்கைகளைக் கடந்து எமது இனம் ஒன்றுபட்டு செயற்பட வேண்டுமென பொறுப்போடு கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த காலங்களில் நாங்கள் ஒற்றுமையாகப் பயணித்தது போன்று எதிர் காலத்திலும் நாங்கள் ஒரு தாய்ப் பிள்ளைகளாக சாதி, சமய, பிரதேச வேறுபாடுகள் இல்லாமல் தமிழ்த் தேசமாக பயணிக்க வேண்டும்.

தமிழ்த் தேசம் என்பது அனைத்து தமிழ் மக்களுக்கு மாற்கு. இது சாதி மதச்சார்பற்ற தேசம். அத்தகைய சாதி மத பிரதேச வேறுபாடுகள் இல்லாத ஒரு தேசத்திற்காகவே பல ஆயிரக்கணக்கானோர் உயிர்களை தியாகம் செய் திருக்கின்றனர். அந்த இலட்சியத்தையே நாங்கள் தொடர்ந்தும் முன்கொண்டு செல்ல வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். 3

## ஈஸ்டர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் பாதிக்கப்பட் டவர்களுக்கு உடனடியாக நீதி வழங்குமாறும், அத னுடன் தொடர்புடைய அனைத் துத் தரப்பினருக்கும் எதிரா கச் சட்டத்தை நடைமுறைப் படுத்துமாறும் கோரி இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக் கப்பட்டது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் பாதிக்கப் பட்டவர்களுக்கான ஆஸ்தி ரேலிய - இலங்கை சங்கம் இதனை ஏற்பாடு செய்திருந் தது. (02)

## மக்களை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்காமல் தேர் தல்கள் ஆணைக் குழுவுக் கும் நீதிமன்ற நீதிபதிக ளுக்கும் அழுத்தங்களைப் பிரயோகித்தும் தேர்தலைச் சீர்குலைக்க முயற்சிக்கின்றது.

அவ்வாறே, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், ஒலிபரப்பு அதிகார சபைச் சட்டம் போன்ற சட்டங்களின் ஊடாக மக்க ளின் எழுச்சியைக் கட்டுப்ப டுத்தி மக்களை அடக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுவருகின்றன. அதன் கீழ், ஊடகங்களை அடக்கி, மக்கள் தங்கள் உரிமைகளுக்காக முன்நிற்கும் போது அவர்க ளைப் பயங்கரவாதிகள் என்று அழைத்து மனித உரிமை கள் மற்றும் அடிப்படை உரிமைகளைக் கூட மீறும் வகையில் அரசு செயற்ப டுகின்றது. - என்றார். (02)

## பயங்கர .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேபோன்றே இதனை நீக்குமாறு சர்வதேசமும் கூறுகிறது. இந்த நேரத்தில்தான் சர்வதேசத்தை திருப்திப்படுத்த புதியது என்ன போர்வையில் மிகக் கொடூரமாக சட்டமொன் றைக் கொண்டுவர இன் றைய ஆட்சியாளர்கள் முயற் சிக்கின்றனர்.

இந்தச் சட்டம் தமிழ் மக்களுக்கு மட்டுமல்லாது அனைவருக்குமே பாதிப்பை ஏற்படுத்தும். ஆனாலும் சர்வதேசத்தை ஏமாற்றும் வகையிலும் ஆட்சியாளர்க ளின் நலன் கருதியும் இந்தச் சட்டத்தை கொண்டுவர ஆட் சியாளர்கள் தீவிர முயற்சி மேற்கொள்கின்றனர்.

ஆகையினால் மிகக் கொடூரமானதும் பல வழி களிலும் பல்வேறு பாதிப் புக்களை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கின்றதுமான இந்தச் சட்டத்தை நாங்கள் முற்றாக எதிர்க்கிறோம் என்பதுடன் நிராகரிக்கிறோம். அதே போன்றே ஏனைய தரப்புக்கும் நிராகரிக்க வேண்டியது அவசியம்.

இந்தச் சட்டத்தை கொண் டுவரும் அரசின் திட்டத்தை அல்லது முயற்சியை உடன டியாக கைவிட வேண்டும் என நாம் கோருகிறோம் - என்றார்.

## குறிகாட்டுவான்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நயினாதீவு நாகபூசனி அம் மன் ஆலயத்தை பிரதிபலிக்கும் வகையில் யாழ்ப்பாணம் பண்ணை சுற்றுவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள நாகபூசனி அம்மன் திருவுருவச் சிலைக்கு தமிழ் புதுவருடப் பிறப்பில் உருத்திர சேனை அமைப்பினால் பால் அபிசேகம் செய்யப்பட்டது.

இந்த நிலையில் உருத்திர சேனா அமைப்பின் பிரதிநிதிகள் நேற்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப் பட்டு 3 மணிநேரம் தீவிர விசாரைணக்கு உட்படுத்தப் பட்டனர்.

உருவச் சிலையை அமைத்தவர்கள் தொடர்பில் தமக்கு தகவல் தெரியாது என்றும் அங்கிருந்த உருவச் சிலைக்குத் தாம் பால் அபிசே கம் மட்டுமே செய்தனர் எனவும் உருத்திர சேனா அமைப்பினர் பொலிஸாருக்கு வாக்குமூலம் வழங்கியுள்ளனர்.

பண்ணையில் அமைக் கப்பட்ட நாகபூசனி அம்மனின் சிலையை அகற்ற தீவிர நட வடிக்கையில் யாழ்ப்பாணம் பொலிஸார் தீவிரமாக உள்ளனர் என்று அந்த அமைப் பினர் குற்றஞ்சாட்டினர்.

இதேவேளை, குறி காட்டுவான் இறங்குதுறையில் வீதியின் நடுவே வைக்கப்பட்டு மறைக்கப்பட்டிருந்த அரச மரத்தை கடற்படையினர் திறந்துள்ளமை அங்கு புத்தர் சிலையை வைப்பதற்கான முயற்சி என்று இந்து மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். நயினாதீவு நாகபூசனி அம் மன் ஆலயத்தின் முக்கியத்து வத்தைக் குறைத்து அங்குள்ள நாக விகாரையின் முக்கி யத்துவத்தை அதிகரிக்கும் வகையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுளதாக அவர்கள் குற்றஞ்சாட்டு கின்றனர்.

## ஈ.பி.எவ்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மல்ல நாளை பாம்புகளையும் யானைகளையும் கூட விற் பனை செய்யும் இந்த ஆட்சி.

இவ்வாறு கடுமையாகச் சாடினார் அனைத்து நிறுவன ஊழியர் சங்கத்தின் தலைவர் வசந்த சமரசிங்க. திருகோ ணமலையில் சனிக்கிழமை செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டை பொருளாதார ரீதியில் இறுக்கமான நிலைக் குக் கொண்டுவந்த ஆட்சியா ளர்கள் தற்போது சர்வதேச நாணய நிதியத்தின் கடனைக் காண்பித்து அனைத்தையும் நிறைவேற்றுவதற்கு முயற்சிக் கின்றனர்.

குறிப்பாக, கடன்களை மீளச்செலுத்துவதற்குப் பொது மக்கள் மீதே சுமையை ஏற்றியுள்ளது இந்த ஆட்சி. வரிகளை அதிகரித்துள்ள அதேநேரம், ஊழியர் சேமலாப நிதி (ஈ.பி.எவ்) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி (ஈ.ரி.எவ்) ஆகிய வற்றில் கை வைக்கவும் நட வடிக்கை எடுத்ததுள்ளது.

அத்துடன் பிணைமுறி களில் இருந்து 15 வீதத்தினைப் பெறுவதற்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஆகவே ரணில், ராஜபக் ஷவினர் கூட்டாக நாட்டை அழிவுப்பாதைக்குள் தான் கொண்டு செல்கின்றனர்.

இந்த அழிவுப்பாதைக்குள் நாட்டையும், மக்களையும் கொண்டு செல்லும் நடவடிக் கைகளைத் தடுத்து நிறுத்த வேண்டும். அதற்காக அனைத்து மக்களும் அணி திரளவேண்டும்.

அதேநேரம், நாட்டின் வளங்களை மட்டுமல்ல, உயிரினங்களையும் விற்பனை செய்வதற்கே முயற் சிகள் நடைபெறுகின்றன. குரங்குகளுடன் நிறுத்த மாட்டார்கள். பாம்புகளையும் விற்பனை செய்வார்கள். யானைகளைக் கூட விற்பனை செய்வார்கள்.

இவை எல்லாம் அன்றாடப் பிரச்சிகைளைத் தீர்ப்பதற்கான வழிகளே தவிர, நிரந்தரமான தீர்வுகள் அல்ல. இந்த ஆட்சியின் பொருளாதாரக் கொள்கை என்ன? நிரந்தர தீர்வுக்கான திட்டம் என்ன? - என்றார்.

## புதிய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகவியலாளர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பு, சுதந்திர ஊடக இயக்கம் ஆகியன ஒன்றிணைந்து வெளியிட்டுள்ள ஊடக அறிக் கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

1979 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பயங் கரவாதத் தடைச்சட்டத்திற்குப் பதிலாகக் கொண்டுவரப்ப டுகின்ற புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமானது, உரிமைகள் தொடர்பில் கொண் டுள்ள கட்டுப்பாடுகளை மேலும் அச்சுறுத்தலுக் குள்ளாக் கியுள்ளது.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் நிறைவேற் றப்படுமாயின் ஆட்சியாளர் களை விமர்சிக்கும், ஊடகவியலாளர்கள், ஊடக நிறுவனங்கள், ஊடகப் பணியாளர்கள், அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சங்கங்கள் மற்றும் அமைப் புக்கள் சட்டரீதியான துன்புறுத் தலுக்கு முகங்கொடுக்க நேரிடும். ஆகவே, குறித்த உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்தினை மீளப்பெற வேண்டியது அவசியம் என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எக்ஸ்பிரஸ்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த அறிக்கைகளைப் பெற் றேன். அதனை அன்றைய தினமே சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்துவிட்டேன்.

அதற்கிடையில், வழக் குத் தாக்கல் செய்யாதிருப் பதற்காக, அல்லது தாமதப் படுத்துவதற்காக காப்புறுதி நிறுவனம் ஒரு தரப்புக்கு இலஞ்சம் வழங்கியதாக எனக்கு அறியக்கிடைத்தது.

அந்தத் தகவல் உண் மையா பொய்யா என்பது பற்றி எனக்குத் தெரியாது. ஒருவருடைய இலண்டன் கணக்கில் 250 மில்லி யன் டொலர்கள் வைப்பிடப் பட்டுள்ளதாக எனக்கு மேலதிக தகவல்களும் கிடைத்தன.

நான்குநாட்களுக்கு முதல் கிடைத்த இந்த தகவல்களை நான் பொலிஸ்மா அதிபர் மற்றும் குற்றப்புலனாய்வுப் பிரிவின் தலைவர் ஆகியோ ரின் கவனத்திற்கு கொண்டு சென்று விசாரணைகளை முன்னெடுக்குமாறு கோரி யுள்ளேன் -என்றார்.

எக்பிரஸ் பேர்ள் கப்பல் பேரிடர் காரணமாக இலங்கை சமுத்திரத்தின் சுற்றுச்சூ ழலுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு 6.2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் இழப்பீட்டைப் பெறவேண்டும் என்று சமுத்திரப் பாதுகாப்பு அதிகா ரசபை நியமித்த நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## கட்சித் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனிடையே, புத்தாண் டின் பின்னரான முதலாவது நாடாளுமன்ற அமர்வு, ஏப்ரல் 25 தொடங்கவுள்ளது.

அன்றைய தினம், பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்தை நாடாளுமன் றில் முன்வைக்கத் திட்ட மிடப்பட்டுள்ளது.

ஏப்ரல் 20 இடம்பெற வுள்ள கட்சித் தலைவர்கள் கூட்டத்தில், இது குறித்து கவனம்செலுத்தப்படவுள்ளது. (02)

விளம்பரத் தொடர்புகளுக்கு தொலைபேசி இலக்கம்
076 443 80 22






காலைக்கதிர்
Kalāikkathir

# மிரிஹானவில் இருவரைத் தாக்கி 5 லட்சம் ரூபாவை கொள்ளையிட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது

மிரிஹான பத்தேகன பிரதேசத்தில் இருவரை தாக்கி ஐந்து லட்சம் ரூபாவை கொள்ளையடித்த குற்றச்சாட்டின் பேரில் நுகேகொட பிரிவு போக்குவரத்து பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் மற்றுமொருவரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர் என மிரிஹான தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொள்ளையுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் மேலும் இருவரான நுகேகொடை பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரையும் கைது செய்வதற்கான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கைது செய்யப்பட வேண்டிய பொலிஸ் சார்ஜன்ட் தலைமறைவாக உள்ளார் என சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.



# யாழ்ப்பாண பாரம்பரிய உணவுத் திருவிழா

சித்திரை புத்தாண்டை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தினால் முற்றவெளி மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட சனிக்கிழமை தொடங்கியது.





இந் நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டு நிகழ்வைத் தொடக்கி வைத்தனர்.

இந்த உணவு திருவிழா இன்றும் மதியம் 2 மணி தொடக்கம் இரவு 9 மணி வரை இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள பாரம்பரிய உணவு வகைகளை பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்தவும் உள்ளூர் முயற்சியாளர்களை ஊக்குவிக்கவும் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று யாழ். மாவட்டச் செயலகம் தெரிவித்தது.

பாரம்பரிய உணவுத் திருவிழாவுடன் பாரம்பரிய இசைநிகழ்வும் இடம்பெற்றது. பாரம்பரிய இசை நிகழ்வில் பங்கேற்ற கலைஞர்களை கௌரவித்து அமைச்சர் சான்றிதழ்களை வழங்கி வைத்தார்.





# ஓமான் பாதுகாப்பு இல்லத்தில் மேலும் 76 பணிப்பெண்கள் தஞ்சமடைந்தனர்



ஓமானில் உள்ள பாதுகாப்பு இல்லத்தில் மேலும் 76 இலங்கை பணிப்பெண்கள் தஞ்சமடைந்துள்ளனர்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஊடகப்பேச்சாளரும், பிரதி பொது முகாமையாளருமான காமினி செனரத் யாப்பா இதனைத் தெரிவித்துள்ளார்.

தடுத்து வைக்கப்பட்டவர்களில் 36 பேர் சுற்றுலா விசாவில் ஓமானுக்கு சென்று பணிபுரிந்துள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பணியகத்தில் பதிவு செய்யாது, வெளிநாட்டில் தொழில்வாய்ப்புகளுக்காக செல்வோருக்கு, எதிர்வரும் காலத்தில் பாதுகாப்பு இல்லத்தில் தஞ்சம்வழங்காதிருக்கதீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்யாது தொழில் வாய்ப்பிற்கு செல்வது, நாட்டின் சட்டங்களை மீறும் செயலாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொழும்பிலிருந்து யாழ்.நோக்கிசென்ற அரச பஸ் மீது கல்வீச்சுத் தாக்குதல்!

## பெண் ஒருவர் காயம்

கொழும்பிலிருந்துயாழ்ப்பாணம் நோக்கி சென்று கொண்டிருந்த அரச பஸ் மீது கல்வீச்சுதாக்குதல்மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஹொரகொல்லபகுதியில் மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத இருவர் கல் வீச்சு தாக்குதல் நடத்தியதில் பஸ்ஸில் பயணித்த பெண் ஒருவர் காயமடைந்து மாரவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என மாரவில தலைமையக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கல் வீச்சில் பஸ்ஸின் முன்பக்க கண்ணாடி உடைந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பஸ் மீது கற்களை வீசிவிட்டு தப்பிச் சென்ற இருவரை அடையாளம் கண்டுகைதுசெய்யமாரவில தலைமையக பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தமிழரிடையே மதப் பிளவுகள் அனுமதிக்கப்படவே கூடாது

ஈழத் தமிழ் இனத்திற்குள் மத ரீதியான பகைமையை உருவாக்கிப் பிளவுகளை ஏற்படுத்தும் திட்டமிட்ட சதி அரங்கேற்றப்படுவதாகதமிழ்த்தேசியமக்கள்முன்னணியின் தலைவர்களில் ஒருவரான, அக்கட்சியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் கூறியிருக்கிறார். அண்மைக் காலமாக வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு நிகழும் இத்தகைய நடவடிக்கைகள் குறித்துப் பகிரங்கமாக வாய் திறந்திருக்கக்கூடிய முதலாவது அரசியல் கட்சித் தலைவர் என்கிற ரீதியில் அவர் பாராட்டப் படவேண்டியவர். இதுபோன்ற விடயங்களில் கருத்துத் தெரிவிக்கப்போய் பெரும்பான்மை இந்துக்களின் வாக்குகளை இழந்துவிடுவோமா என்கிற அச்சத்தில் மற்றைய தலைவர்கள் பதுங்கிக்கொண்டிருக்கும்போது துணிந்து இது தொடர்பில் அவர் குரல் எழுப்பியிருப்பது வரவேற்கத்தக்கது.

வெடுக்குநாறி மலையில் ஆதி சிவன் கோயில் இடித்தழிக்கப்பட்டதாகட்டும், குருந்தூர் மலையில் நீதி மன்ற உத்தரவை மீறி விகாரை அமைக்கப்பட்ட அதேநேரம் சைவ மக்கள் அங்கு வழிபாடு இயற்றுவதற்குத் தடை விதிக்கப்படுவதாக இருக்கட்டும் கன்னியாவில் சைவ பாரம்பரியம் அகற்றப்பட்டு பௌத்த ஆதிக்கம் நிலைநாட்டப்படுவதாகட்டும் என்று சைவம் அடக்குமுறைக்கு அல்லது அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படும் போதெல்லாம் அதற்கெதிராக நாடாளுமன்றத்தில் காத்திரமான எதிர்ப்புக் குரலைப் பதுவு செய்திருப்பவர் கஜேந்திரன்.

அவர்தான் இப்போது தமிழர்கள் மத ரீதியாகப் பிரிக்கப்படக்கூடாது என்கிற அக்கறையையும் வெளிப் படுத்தியிருக்கிறார். அதாவது பௌத்த சிங்கள பேரின வாதத்தால் சைவம் நசுக்கப்படும் போதெல்லாம் அதற்கெதிராகக் குரல் கொடுத்த ஒருவர், சைவம் தனது மேலாண்மையை நிறுவும் முயற்சியில் மற்றைய மதங்களைப் பின்பற்றும் தமிழர்களைக் காயப்படுத்திவிடக்கூடாது என்பதிலும் அக்கறையாக இருக்கின்றார். எனவே அவரை உடனடியாக கிறிஸ்தவ ஆதரவாளர் என்று யாரும் முத்திரை குத்திவிட முடியாது.

மதத்தால் வேறுபட்டிருந்தபோதும் தமிழர்களான முஸ்லிம்களைப்பிரித்துதனி இனமாக்கிய சிங்களவர்களின் செயலைப்போன்று கிறிஸ்தவர்களையும்பிரித்துவிடாதீர்கள் என்பதுதான் சைவத்தின் முன் அவர் வைக்கும் கோரிக்கை. அது மிகச் சரியானதும் தேவையானதும் கூட.

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்றும் தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி என்றும் உலகப் பொதுமையை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பாடி உணர்த்திய தமிழ் மூத்தோர் வழி வந்தவர்கள் இன்று சமயத்தால் தமிழர்களைப் பிரிக்க முற்படுவது பாதகச் செயல்.

மதமாற்றத்தை ஒரு பிரச்சினையாக உணர்ந்தால் ஏன் மாறுகிறார்கள் என்பதற்கான அடிப்படைகளை ஆராய்ந்து அதனை நிவர்த்தி செய்து சமயச் சீர் திருத்தங்களைச் செய்துமறுமலர்ச்சியை ஏற்படுத்துவதைவிட்டு, ஆங்காங்கே சிலைகளை நிறுவியும் ஆர்ப்பாட்டங்களைச் செய்தும் சைவத்தின் மேலாதிக்கத்தை நிறுவ முற்படுவது சரியல்ல. அதையே பௌத்தம் செய்கிறபோது எமக்கு வலிப்பதைப் போன்றே மற்றைய சமயத்தவருக்கு அது வலியை ஏற்படுத்தும் என்பதைப் புரிந்துகொள்ளாதவர்கள் எப்படி ஆன்மிகவாதிகளாக இருக்கமுடியும்?

எனவே இந்த விடயத்தில் அரசியல் தலைவர்கள் உடனடியாகத் தலையிட்டு மதங்களுக்கு இடையில் மேலும் பிணக்குகள் அதிகரிக்காத வகையில் தமிழரிடையே பிளவுகள் தோன்றாத வகையில் இணக்கப்பாடுகளை ஏற்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும். அது அவர்களின் கடமையும்கூட. கட்டுறுதியான தலைமைத்துவம் இல்லாதபோது இத்தகைய குழப்பங்கள் தோன்றுவது வழமை. தமிழ்த் தலைமைகள் ஒன்றுபட்டு இந்த விடயத்தில் தீர்வை உடனடியாகக் காணவேண்டும்.

# சஜித்தை பிரதமராக்க ஜனாதிபதி இணக்கம்!



ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித்துக்குப் பிரதமர் பதவி வழங்கத் தயார் என ஜனாதிபதி கூறியுள்ளார் எனத் தெற்கு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சஜித்திற்கு பிரதமர் பதவி வழங்கத்தயார்எனஜனாதிபதி கூறினார் என நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரவூப் ஹக்கீம் மற்றும் மனோ கணேசன் ஆகியோர் கூறினர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சிறுபான்மை கட்சிகளுடன் ஜனாதிபதி நடத்திய சந்திப்பின் போது இந்த விடயம் கூறப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போதைய அரசாங்கத்திற்கு எந்த நேரத்திலும் ஒத்துழைப்பு வழங்கத் தயார் என சிறுபான்மை கட்சிகள் உறுதியளித்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தனித் தனி நபர்களாகவோ தனிக் கட்சிகளாவோ அன்றி சஜித் தலைமையிலான ஒட்டுமொத்த ஐக்கிய மக்கள் சக்தியும் அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பதே பொருத்தமானது என ஜனாதி பதி கூறியுள்ளார்.

# வடக்கு தீவுகளை அபகரிக்கும் நோக்கில் தீவக அதிகார சபை தடுத்து நிறுத்தாவிட்டால் பல மோசமான விளைவுகள் ஏற்படும்

## தமிழ்த் தேசிய பண்பாட்டு பேரவை நிஷாந்தன் எச்சரிக்கை

வடக்கில் உள்ள தீவுகளை இலக்கு வைத்து உருவாக்கப்படவுள்ள தீவக அதிகார சபையை தடுத்து நிறுத்தாவிட்டால் பல மோசமான பின் விளைவுகளை வடபகுதி மக்கள் எதிர்நோக்க வேண்டி வரும் என தமிழ்த் தேசிய பண்பாட்டுபட பேரவையின் தலைமை ஒருங்கிணைப்பாளர்எஸ்.நிஷாந்தன் எச்சரிக்கை விடுத்தார்.

யாழ். ஊடகஅமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

வடபகுதி தீவுகளை கையகப்படுத்தும் நோக்கில் இலங்கையில் உள்ள தீவுகளை ஓர் அதிகார சபையின் கீழ் கொண்டு வருவதாக தெரிவித்து ஓர் அதிகார சபையை உருவாக்கும் முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன.

வட பகுதியில் குறிப்பாக யாழ். குடாவில் 15 இற்கும் மேற்பட்ட வளமான தீவுகள் காணப்படுகின்ற நிலையில் அதனை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யவோ அல்லது நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கான திட்டத்தின் அடிப்படையில் குறித்த அதிகார சபையை உருவாக்க




முயல்கிறார்கள்.

மகாவலிஅதிகாரசபையை உருவாக்கி எவ்வாறு சிங்கள குடியேற்றங்களை வடபகுதியில் ஏற்படுத்தினார்களோ அதே போன்று தீவக அதிகார சபையை உருவாக்கி தமிழர்களின் தீவுகளை கையகப்படுத்தும் தந்திரத்தை அரசாங்கம் செய்ய உள்ளது.

தீவக அதிகார சபை உருவாக்கப்பட்டால் பிரதேச சபை, பிரதேச செயலகம், மாவட்ட செயலகம் மற்றும் ஆளுநர் செயலகம் என்பன தலையிட முடியாத சூழ்நிலை உருவாகும்.

அது மட்டுமல்லாது வடமாகாண சுற்றுலா அதிகார சபை மூலம் கிடைக்கப் பெறுகின்ற வருமானம் மாகாணத்தை விட்டு மத்திக்குச் செல்வதோடு மாகாண அதிகாரங்கள் செயலிழந்து போகும்.

குறித்த அதிகார சபை செயற்படுத்தப்படும். ஆனால் தீவகப் பகுதிகளில் மீன்பிடித் தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டு வாழும் மக்கள் தொழிலுக்கு செல்வதில் வரையறைகள், மட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்படலாம்.

ஆகவே இந்த விடயம் தொடர்பில்தமிழ்மக்கள்சார்ந்து பயணிக்கின்ற அரசியல் கட்சிகள் விழிப்பாக இருந்து வரபோகும்ஆபத்தைமுன்கூட்டியே தடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# பிரித்தானிய வெளிவிவகார அதிகாரிகளை சந்தித்த ரெலோவின் கருணாகரன் எம்.பி!

பிரித்தானிய வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளிளுக்கும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்துக்குமான (ரெலோ) சந்திப்பு லண்டனில் உள்ள வெளிவிவகார அமைச்சு காரியாலயத்தில் நடைபெற்றுள்ளது.

கடந்த வியாழக்கிழமை மாலை நடைபெற்ற இந்தச் சந்திப்பில், இலங்கையில் இருந்து சென்றிருந்த ரெலோ செயலாளரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரன் (ஜனா) மற்றும் பிரித்தானியக் கிளையின் தலைவர் சாம் சம்பந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.




இதன்போது, எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவிருக்கும் மனித உரிமைகள்கூட்டத்தில்உள்வாங்க வேண்டிய பல முக்கிய விடயங்கள், பயங்கரவாதத் தடைசட்டம்,தொடர்ச்சியானநில அபகரிப்பு தொல்பொருள், வன இலாகா, பாதுகாப்பு அமைச்சு ஊடாக வடக்கு கிழக்கில் தமிழ் இனத்தின் இனபரம்பலைக் குறிவைத்து மேற்கொள்ளப்படும் அரசின் திட்டமிட்ட செயற்பாடுகள், கடந்த நான்கு வருடங்களாகத் திட்டமிட்டு இழுத்தடிப்பு செய்யபடும் மாகாண சபை தேர்தல், உள்ளூராட்சித் தேர்தல், தனது அரசியல்அமைப்பையேமீறிச் செயற்படும் அரசின் செயற்பாடுகள் தொடர்பாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மேலும்,72வருடங்களாக இழுத்தடிப்பு செய்யப்படும் தமிழ் இனப்பிரச்சினை, 12 வருடங்களாக எதை யுமே அமுல்படுத்தாத யு.என்.எச்.சி.ஆர். தீர்மானங்கள், 16 தடவைகள் ஐ.எம்.எவ். பரிந்துரைகள் எதையுமே நடைமுறைப்படுத்தாமல் மீண்டும்17ஆவதுதடவையாக ஐ.எம்.எவ். கையேந்தும் நிலைக்குச் சென்ற அரசின் தவறான கொள்கைகளைச் சுட்டிக்காட்டி இவ்வாறான ஓர் அரசுடன் மூன்றாவது தரப்பு மத்தியஸ்தம் இன்றி அரசியல் தீர்வுக்கான சாத்தியமான அறிகுறிகள்இல்லையெனவும் பிரித்தானியாவை இந்தியாவுடன் இணைந்து இலங்கையில்தமிழ்இனத்திற்குஒரு நிரந்தர அரசியல் தீர்விற்கான அழுத்தம் கொடுக்கப் பட வேண்டும் என்று எடுத்துக் கூறப்பட்டுள்ளது. அத்துடன், அரசியல் கொந்தளிப்பான நாட்டில்பொருளாதார வளர்ச்சி அடையமுடியாது என்றும், நாட்டின் வளர்ச்சிக்குப் பதிலாகக் கிளர்ச்சியை அடக்கவே சர்வதேச நிதிகளை அரசு இயந்திரம் பாவிக்கிறது என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555

# உரலார் கேள்வியும் உலக்கையார் பதிலும்



- கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் -

**1. உரலார் கேள்வி:-**

புத்தாண்டு எப்படி இருக்கப் போகிறது?

**உலக்கையார் பதில் :-**

உலகத்தில் ரஷ்ய, உக்ரைன் போரை வைத்து வல்லரசுப் போட்டி நடந்து கொண்டிருப்பதால், எந்நேரமும் மூன்றாவது உலகப்போர் வெடித்துவிடலாம் எனும் அச்சத்தில் உலக நாடுகள் இருக்கின்றன. உலகத்தை அழிவுப் பாதையில் தள்ளும்வகையில்வல்லரசுநாடுகள்உலகின்அமைதியையும், நிம்மதியையும்பணயம்வைத்துசூதாடிக்கொண்டிருக்கின்றன.

நமது நாட்டிலோ, இத்தனை அழிவுகளுக்குப் பின்னும் பாடம் கற்றுக் கொள்ளாமல் இன்னும் இனப்பகையை வளர்க்கும் முயற்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன. தொல் பொருள் திணைக்களம் என்ற பெயரில் ஓர் அமைப்பு, சிங்களப் பேரினவாத சுயநலக் கரத்தைத் தேவையற்ற இடங்களிலெல்லாம் தன் இஷ்டத்திற்கு நீட்டி மீண்டும் இம் மண்ணில் இனப் பகை விதைக்க முனைந்துகொண்டிருக் கிறது. நீதிமன்றம், ஜனாதிபதி என இந்நாட்டில் இருக்கும் உயர் பீடங்களையெல்லாம் தூக்கி எறிந்து செயற்படும் அவ் அமைப்பின் மூக்கணாங்கயிறு எவர் கையில் இருக்கிறது என்பது பற்றி எவருக்கும் தெரியவில்லை. இந் நிலையில் நாடு மீண்டும் என்னாகப் போகிறதோ என்று நடுநிலையாளர்கள் அச்சத்தோடு இருக்கிறார்கள்.

நம் தமிழினத்திலோ, நடந்து முடிந்த போரினால் சிதைந்து கிடக் கும் தமிழினத்தை, மீள் கட்டுமானம் செய்யும் கவலையேயின்றி, நம் தலைவர்கள் இனத் தலைவர் களாயன்றி, கட்சித் தலைவர்களாய் மட்டும் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதில்கூட அவர்களிடம் நேர்மை இல்லை. கட்சியின் உயர்வைவிடத்தமது தனி உயர்வு பற்றியே கட்சிக்குள்ளும் தலைவர்கள் சிந்திக்கிறார்கள். அதனால் பொது வெளிகளில் ஒரே கட்சித் தலைவர்கள், நாணமின்றித் தமக்குள் மல்யுத்தம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

உலக நடப்பும் சரியாய் இல்லை. நாட்டு நடப்பும் சரியாய் இல்லை. நமது இனத்தின் நடப்பும் சரியாய் இல்லை. இந்நிலையில் புத்தாண்டு எப்படி இருக்கப்போகிறது என்பதை நான் சொல்லியா தெரியவேண்டும்.

ஆனாலும் எங்கோ இருந்து இதுவரை நம்மைக் காத்த ஒரு நிறுவனமான சக்தி, ஏதோ வடிவில் வந்து இத்தனை பிரச்சினைகளையும் சரியாக்கி நம்மைக் காத்தருளும் என்ற நம்பிக்கையோடு உங்களுக்கு என் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

**சல்லடையாரின் சலிப்பு :- வாரிதியார் சிந்திக்க வைக்கிறார்.**

**2. உரலார் கேள்வி:-**

நமது இளைஞர்களிடம் ஆளுமையை வளர்க்கப் போவதாகச் சொல்லி வருகிறீர்கள். ஆளுமையுள்ள இளைஞர்களை நீங்கள் எங்கும் சந்திக்கவே இல்லையா?

**உலக்கையார் பதில் :-**

ஏன் இல்லாமல்? அண்மையில் சில இளைஞர்களின் ஆளுமை கண்டு அதிசயித்தேன். 'டான் ரிவி'யில் நடை பெறும் 'எது சரி? எது பிழை?' என்பதான ஓர் நிகழ்ச்சியில் 'மதங்களுக்கிடையிலான ஒற்றுமையும், அவை சீர்குலை வதற்கான காரணங்களும்' என்பதான தலைப்பில் நடந்த விவாத நிகழ்ச்சி ஒன்றைத் தற்செயலாய்க் கேட்க முடிந்தது. பெரியவர்கள் சிலருக்கும், இளைஞர்கள் சிலருக்குமான விவாதம் ஒன்றை அந் நிகழ்வில் அமைத்திருந்தார்கள்.

அந் நிகழ்வில் கலந்து கொண்ட சமயப் பெரியவர்களிடம் ஐங்கரன், பார்த்திபன் என்கின்ற இரு இளைஞர்கள் துணிவாகக் கேள்விகளைத் தொடுத்தார்கள். ஐங்கரன், அரச நிர்வாகத்திற்குள், மதச் செல்வாக்கைப் புகுத்தி இனத் தைப் பிளவு செய்கிறீர்கள் என்று குற்றம் சாட்டினான். தன் கருத்திற்குச் சான்றாக மன்னாரில் மாவட்டச் செயலர் நியமனத்தின்போது, கிறிஸ்தவர் ஒருவர்தான் அப் பதவிக்கு வரவேண்டுமெனக் கிறிஸ்தவ மதத் தலைவர்களும், யாழ்ப்பாணத்தில் மாவட்டச் செயலர் பதவிக்கு ஒரு சைவர்தான் வரவேண்டும் என இந்துமதத் தலைவர்களும் கோரிக்கை வைத்தது இனத்தைப் பிரிக்கும் செயலாகாதா? என்பதாய்க் கேள்வி எழுப்பினான்.

அந்நிகழ்வில் கலந்துகொண்ட அருட்தந்தை ஜெயக்குமார் என்கின்ற ஓர் கிறிஸ்தவப் பாதிரியார் முதலில் அக்கருத்தை மறுக்க முயன்றார். பின் எதிரணியிலிருந்த இளைஞர்கள் சான்றோடு தம் கருத்தை உறுதிசெய்ய, அச்செயலைத் தானும் கண்டிப்பதாகப் பெருந்தன்மையோடு ஒத்துக்கொண்டார்.

அடுத்ததாக இந்து மதத்தைச் சார்ந்து வந்திருந்த சிவ சேனை அமைப்பைச் சேர்ந்த மறவன்புலவு சச்சிதானந்தம் ஐயா அவர்களிடமும் அதே கேள்வி ஐங்கரனால் முன்வைக் கப்பட்டது. நீங்களும் யாழ்ப்பாணத்திற்குக் கிறிஸ்தவ மதம் சார்ந்த மாவட்டச் செயலர் ஒருவர் வருவதை எதிர்த்துப் போராடினீர்கள். அச்செயல் சரியானதா? என்பதாய் அவ் இளைஞர் கேட்க உடனே அப் பெரியவர் தானோ, தான் சார்ந்த அமைப்போ மதங்களுக்கு இடையில் வேற்றுமை பார்ப்ப தில்லை மதமாற்றம் செய்பவர்களைத்தான் நாங்கள் கண்டித்தோம் என்று பதிலுரைத்தார்.

அப்போது ஐங்கரனுக்கு அருகில் இருந்த முன்னாள் யாழ். மாநகர சபை உறுப்பினரான பார்த்திபன் குறுக்கிட்டு மாநகரசபைத் தேர்தலின்போது நீங்கள் உங்கள் அமைப் பின் சார்பாக, 'சைவ வாக்காளர்களே! சைவ வேட்பாளருக்கு வாக்களியுங்கள்!' என்று சுவரொட்டிகள் ஒட்டிப் போராடினீர் களே என்று சுட்டிக்காட்ட அப் பெரியவர் நாம் அரசியலுக்குள் மதத்தைப் புகுத்தி வேற்றுமைகள் உண்டாக்குவதில்லை என்று சொன்னதோடு, அப்படி நாங்கள் ஏதாவது செய்திருந்தால் அதற்கான சான்றினைக் காட்டுங்கள் என்று துணிவோடு சவால் விட்டார்.

அவர் சவால் விடுத்த சிறிது நேரத்திற்குள் அருகிலிருந்த ஐங்கரன், அப் பெரியவர் சார்ந்த இணையத்தளத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த அத்தகைய ஒரு சாட்சியை எடுத்துக் காட்ட பெரியவர் பாடு சங்கடமாயிற்றாம்.

ஏனோ தெரியவில்லை, இணையத்தளத்தில் இருந்து அப்பெரியவருக்கு ஐங்கரன் சான்றினை எடுத்துக்காட்டிய அந்தப் பகுதி, நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட்டபோது 'எடிற்' செய்யப்பட் டிருந்தது. வழக்கமாகத் துணிவோடு நிகழ்ச்சிகளைத் தயாரிக்கும் சுலக்ஷன் அந் நிகழ்வின் முக்கிய பகுதியை ஏன் 'எடிற்' செய்தார் என்று தெரியவில்லை. பின்னர் ஐங்கரன் பேசியபோதுதான் சான்று காட்டிய விவரம் வெளிவந்தது.

தொடர்ந்து நடந்த விவாதத்தின்போது, பௌத்த மத அத் துமீறல்க ளுக்கு நீங்கள் அதிகம் எதிர்ப்புக் காட்டுவதில்லை என்பதான விடயம் வர, சங்கடமான அக் கேள்வியைச் சமா ளிப்பதற்காகத் தன் அரசியல் வரலாற்றை அப் பெரியவர் விரிவாய்ச் சொல்லத் தொடங்கினார். மீண்டும் ஐங்கரன் குறுக்கிட்டு நாங்கள் கேட்ட கேள்விக்கு நீங்கள் பதில் தரவில் லையே எனக் கேட்க, அப் பெரி யவர் கோபப்பட்டு ஐங்கர னைக் கடுமையாய்ச் சாடினார்.

ஐங்கரன் அமைதியாய் இருக்க, மீண்டும் அருகில் இருந்த பார்த்திபன் நீங்கள் ஐங்கரனின் கேள்விக்குப் பதில் சொல்ல வில்லையே? என்று கேள்வி தொடுக்க, கோபத்தோடு பல காரணங் களைச் சொல்லிப் பதில் சொல்லாமல் மெல்ல நழுவிக் கொண்டார் அப் பெரியவர்.

சிறிது நேரம் அந் நிகழ்வில் அமர்ந்திருந்த ஐங்கரன், எங்கள் கேள்விக்குப் பதில் சொல்லாமல் இப் பெரியவர் மரி யாதைக் குறைவாக ஏதேதோ பேசுகிறார். இந் நிகழ்விற்குப் பெயரே 'எது சரி? எது பிழை?' என்பதுதான். அப்படியிருக்க எங்கள் கேள்விக்குப் பதில் சொல்லாமல் இப் பெரியவர் எங்களை மரியாதைக் குறை வாகக் கண்டிக்கிறார். அதனால் இந் நிகழ்ச்சியில் தொடர்ந்து இருக்க நான் விரும்பவில்லை என்று கூறிவிட்டு, நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கும்போதே இடையில் எழும்பிச் சென்றான்.

நீண்ட நாட்களுக்குப் பின்பாக, தம் கருத்தைத் துணி வோடு சொல்லும் இரு இளைஞர்களின் ஆளுமை கண்டு மனம் மகிழ்ந்தேன். தனது கருத்திற்கு மரியாதை கிடைக்காத போது 'மன்னவனும் நீயோ? வள நாடும் உனதோ? உன்னை அறிந்தோ யாம்; தமிழை ஓதினோம்?' என்று கூறிச் சோழனு டைய மாபெரும் சபையை விட்டு வெளியேறிய கம்பனைப் போல, மற்றைய எதனைப் பற்றியும் கவலைப்படாமல் எழுந்து சென்ற ஐங்கரனின் ஆளுமைத் திறன் என்னை வியக்க வைத்தது. அந் நிகழ்வில் இருந்து ஒன்றைத் தெரிந்து கொண்டேன். எம் மண்ணில் இருந்த ஆளுமை விருட்சம் முற்றாய் அழிந்து விடவில்லை. மரம் வீழ்ந்திருந்தாலும் முளைக்கத் தயாரான நிலையில் ஆளுமை விதைகள் பல இன்னும் இருக்கத்தான் செய்கின்றன. நாளை அவை முளைத்து வெளிவரும்போது, நம் மண் மீண்டும் நிமிர்வுறும். நம்பிக்கை தந்த இரு இளைஞர்களுக்கும் என் பாராட்டுக்கள்.

**சல்லடையாரின் சலிப்பு :- விவாதத்திற்குப் போவான் ஏன்? வீண் கவலைப்படுவான் ஏன்?**

---

**வணக்கம் ஐயா,**

உங்கள் கேள்வி பதில் பகுதியில் சக்திவேல் பாதிரியார் கருத்திற்குத் தங்கள் பதில் கருத்தை வாசித்தேன். ஒரு சிறந்த மிதவாதியான (துலி--ளஷழிமிள) தாங்களே, "இரத்தம் கொதிக்கிறது, பொறுமைக்கு எல்லை உண்டு மற்றும் நாங்கள் நடவடிக்கை எடுத்தால் தாங்க மாட்டார்கள்'' போன்ற கூற்றுக்கள் மூலம் மிகுந்த கோபாவேசத் துடன் இருப்பது தெரிகிறது. ஒரு கிறிஸ்தவனாக இவ்விடத்தில் எனது கருத்துக்களை பதிவிட விழைகிறேன்.

சக்திவேல் பாதிரியாரின் கருத்துகள் தேவை யற்றன. அவரவர் விருப்பப்படி மற்ற மதங்களுடன முரண்படாதபடி சிலைகள் நிறுவலாம். ஆனால் வடக்கு கிழக்கில் ஏராளமான கோவில்களும் ஆலயங்களும், ஆங்காங்கே வீதிகளில் பல சிலைகளும் உள்ள நிலையில் இந்துக்களோ கிறீஸ்தவர்களோ ஏட்டிக்கு போட்டியாக மேலும் மேலும் சிலைகள் நிறுவது தேவையற்றது என்பது எனது தனிப்பட்ட கருத்து. நீங்கள்கூட இதைப்பற்றி சமீபத்தில் கூறியிருந்தார்கள்.

சில சபைகள் பணத்தை காட்டி மதமாற்றம் செய்து வருகின்றன. யாரேனும் ஆன்மீக ரீதி யாக ஈர்க்கப்படாமல் பொருளுக்காக மட் டும் மதமாற்றம் செய்யப்படுவது ஏற்க முடியாதது. இயேசு கிறிஸ்துகூட தனது சீடர்களை நற்செய்தி (good news on salvation) பரப்ப அனுப்பும்போது அவர்களைப் பணப்பையையோ கைப்பையோ எடுத்துச் செல்லவேண்டாம் என்றே அறிவுறுத் தினார். மேலும் அவர் நற்செய்தியைக் கேட்கச் செவியுள்ளவர்கள் கேட்கட்டும் (Let him who has ears listen) என்று அறிவுறுத்தினார். அதாவது யாருக்கும் வலுக்கட்டாயமாக போதனை செய்யவேண்டாம் என்பதே பொருள். எனவே பணத்தைக் காட்டியோ, விருப்பத்திற்கு மாறாகவோ மதமாற்றம் செய்பவர்கள் கிறீஸ்துவின் போத னைகளை அப்பட்டமாக மீறுகிறார்கள் என்பது வெளிப்படை.

சமீப காலமாக , சில சபைகள் அடாவடித்தனங் களில் ஈடுபடுவதாகச் செய்திகள் வருகின்றன. இது மிகவும் கண்டிக்க வேண்டியது. திருக்கேதீஸ்வர அலங்கார வளைவு எந்தக் காரணமும் இன்றி இடிக்கபட்டது மிகக் கேவலமான செயலாகும். பல சபைகள் அமைதியாகவும் புரிந்துணர்வுடன் செயற்படும்போது இவ்வாறான நடவடிக்கைகள் ஒட்டுமொத்த கிறிஸ்த சமூகத்தையே தலை குனிய வைக்கிறது. மேலும் ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தையும் காட்டச் சொன்ன இயேசு கிறிஸ்துவின் போதனைகளுக்கு நேரெதிர் மாறாக இவர்களின் நடவடிக்கைகள் உள்ளன.

சிலுவையில் உயிர் துறக்க முன் " பிதாவே இவர்கள் அறியாமல் செய்கிறார்கள். இவர்களை மன்னியும்" என்று எதிரிகளுக்காக வேண்டிக் கொண்ட கிறிஸ்துவின் போதனைகளுக்குக் களங்கமாக உள்ளன இவர்களின் சண்டித்த னங்கள்.

போரின் முன்னரும் போரின் போதும் இந்துக்கள் கிறீஸ்தவர்களிடையே நிலவிய சகோதரத்துவம் தற்போது சீர்குலைந்து வருவது மிகவும் கவலைக்குரியது. தமிழால் பிணைந்திருந்த இரு மதங்களும் தற்போது ஒரு சிலரின் தவறான செயல்களால் விலகிச் செல்வது மனம் வருந்தத்தக்கது. சிவசேனை போன்ற சில அமைப்புகள் இப்பிரிவினையை ஊக்குவிக்கின்றன.

2020 தேர்தலின்போது இந்துக்கள் இந்துக் களுக்கே வாக்களிக்கவேண்டும் என்று சுவரொட் டிகள் ஒட்டப்பட்டன. வடக்கில் எந்த உயர்பதிவியும் இந்துக்களுக்கு மட்டுமே வழங்க வேண்டும் ( தகுதிக்கு அல்ல!) போன்ற கோஷங்கள் சிறுபான்மையினரை அந்நியப்படுத்துகின்றன. இதையே தான் சிங்கள அரசும் காலங்காலமாகச் செய்து வந்ததை இவர்கள் மறந்து விட்டார்களா? மேலும் சமீப காலமாக பாஜகவினர் தமிழ் நாட் டிலிருந்து வருகை தருவதும் கருத்துக் கூறுவதும் மதப் பிரிவினையை ஈழத்தமிழர் மத்தியில் ஊக்குவிப்பதற்காகவோ என்றும் சந்தேகம் எழுகிறது.

ஒன்று நிச்சயம். ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்கு தான் கொண்டாட்டம் என்பது போல், இங்கே நம்மவர்கள் மோதிக்கொள்ளும்போது சிங்கள பௌத்த அரசு தனது கைவரிசையைத் தடையின்றி அரங்கேற்றிக் கொண்டு செல்வது புரிகிறது. இம் முரண்பாடுகளின் பிண்ணனியில் அரச கைக்கூலிகள் இருந்தால் ஆச்சரியம் இல்லை.

N. விஜேன்.

காலைக்கதிர்
Kalaikkathir



காலைக்கதிர் Kalaikkathir

# பிள்ளையார் ஆலயம் யாழ். சிறையில் திறப்பு

யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்குள் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பிள்ளையார் ஆலயமானது கும்பாபிஷேகத்துடன் பிரதிஷ்டை செய்யப்பட்டு விசேட வழிபாடுகள் இடம்பெற்றன.

புத்தாண்டு தினத்தில் இந்தஆலயம்வழிபாட்டுக்குத் திறக்கப்பட்டது. சிறையில் அடைபட்டிருக்கும் காலத்தில்கூட கைதிகள் இறை வழிபாடுகளைத்தடையின்றி மேற்கொள்ளும் நோக்கில் இந்தச்சிறுஆலயம்உருவாக்கப்பட்டுள்ளது.

லண்டனைச் சேர்ந்த தொழிலதிபர் சி.அமரசிங்கத்தின் முழுமையான நிதிப்பங்களிப்புடன் ஆலயம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

யாழ். கதிரேசன்கோவில்



பிரதம குருபாலசுதர்சன் சிவாச்சாரியார் கும்பாபிஷேகத்தை நடத்திவைத்தார். இந்நிகழ்வில்சிறைச்சாலை அத்தியட்சகர் கே.பி.ஏ. உதயகுமார, சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.





# மட்டக்களப்பில் கடந்த 10 நாள்களுக்குள் ரயில் விபத்தால் 3 உயிரிழப்புக்கள் பதிவு

மட்டக்களப்புரயில்நிலையத்தை அண்மித்த பகுதியில் ரயிலில் மோதி குடும்பஸ்தர் ஒருவர் பலியாகியுள்ளார்.

வியாழக்கிழமை அதிகாலை 1.35 மணிக்கு மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கி புறப்பட்ட ரயிலில் பயணித்தவர்கள்சடலத்தை கண்டு, மட்டக்களப்பு தலைமையக பொலிஸாருக்கு அறிவிக்க,அதன்பின்னர்சடலத்தை மீட்கும்நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த விபத்தில் உயிரிழுந்தவர்மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கி வியாழக்கிழமை இரவு 8.15 மணிக்கு புறப்பட்ட கடுகதி ரயில் மோதி உயிரிழந்திருக்கலாம் என மட்டக்களப்பு



ரயில் நிலைய அதிகாரிகள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் விபத்தில் உயிரிழந்த நபர், சத்துருகொண்டான் பாடசாலை வீதியை சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான இராமசாமிரமேஷ்காந்(வயது -44) என்பவரே என அவரது மனைவி மற்றும் சகோதரி அடையாளம் காட்டியுள்ளனர்.

முன்னதாக இம்மாதம் கடந்த 3 மற்றும் 10 ஆம் திகதிகளில் இருவர் ரயில் விபத்தில் பலியாகியிருந்த நிலையில், மூன்றாவதாக இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அதன்படி, கடந்த 10 நாள்களுக்குள் ரயில் விபத்தால் 3 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.






# விபத்துக்கள் குறைவாக பதிவான புத்தாண்டு தினம்

தமிழ் - சிங்கள புத்தாண்டு தினமான கடந்த வெள்ளிக்கிழமை பட்டாசு வெடிப்பு உட்பட்ட விபத்துக்கள் கணிசமான அளவு குறைந்துள்ளன என தேசிய வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் வெள்ளி இரவு நிலைவரப்படி, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பதிவாகியுள்ள மொத்த அவசர நோயாளர்களின் எண்ணிக்கை 118 ஆகும். இதில் 90 ஆண்கள் மற்றும் 28 பெண்கள் அடங்குவர் எனக் கூறப்படுகிறது.

# பொலிஸ் பாதுகாப்பு நடவடிக்கை தொடரும்

பண்டிகைக் காலத்தின் பின்னரும் பொதுமக்களின் பாதுகாப்புக் கருதி பொலிஸாரும் புலனாய்வு பிரிவினரும் தொடர்ந்தும் சேவையில் ஈடுபடுகின்றனர் என்று பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ்அத்தியட்சகர்நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

மதுபோதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளைக் கைது செய்வதற்காக, பொலிஸார் தொடர்ந்தும் சோதனையில் ஈடுபடுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.



பொதுமக்கள் தமது சொந்த வாகனங்களில் பயணிக்கும்போது, அவதானத்துடன் செல்ல வேண்டும். மதுபோதையில் வாகனம் செலுத்துவதைத் தவிர்ப்பதுடன், வீதி விதிமுறைகளை உரியவாறு பின்பற்ற வேண்டும் என்றும் பொலிஸ் பேச்சாளர் அறிவுறுத்தியுள்ளார். (02)

# பாதுகாப்பற்ற கிணற்றில் வீழ்ந்து 16 வயதுச் சிறுவன் உயிரிழப்பு

கஹட்டகஸ்திகிலிய, நெகுதாவெள பிரதேசத்தில் பாதுகாப்பற்ற நிலையில் உள்ள கிணற்றில் தவறி வீழ்ந்து சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே பகுதியை சேர்ந்த 16 வயது சிறுவனே உயிரிழந்துள்ளான்.

வீட்டுக்கு அருகில் சிறுவர்களுடன்விளையாடிக் கொண்டிருந்தபோது இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாதுகாப்பற்றவாறு உள்ள கிணற்றில் தண்ணீர் நிறைந்திருந்ததாகக் கூறும் பொலிஸார் இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வாகன விபத்தில் 2 பெண்கள் சாவு

### இரு சிறுவர்கள் உட்பட 8 பேர் காயம்

உழவு இயந்திரத்துடன் கன்டர் ரக வாகனம் மோதியதில் இரண்டு பெண்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்து பொலன்னறுவை - ஒனேகம வீதியில் வலேகடே என்ற இடத்தில் நேற்று இடம் பெற்றுள்ளது.

அத்துடன் இந்தவிபத்தில் 2 சிறுவர்கள் உட்பட 8 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (02)

# பண்ணை நாகபூசனியை பார்வையிட்ட அமைச்சர்

யாழ்ப்பாணம்பண்ணை சுற்றுவட்டத்தில் திடீரென முளைத்த நயினாதீவு நாக பூசணிஅம்மனின்சிலையை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சனிக்கிழமை பார்வையிட்டார்.

பண்ணையில் சனிக்கிழமை மாலை உண வுத் திருவிழாவில் பங்கேற்றுவிட்டே குறித்த சிலையை அமைச்சர் பார்வையிட்டார்.

நாகபூசணி அம்மனின் சிலைவியாழக்கிழமை இரவு வைக்கப்பட்டநிலையில், அம்மனின் சிலைக்கு மறு நாள்வெள்ளிக்கிழமை உருத்திரசேனை அமைப்பால்



அபிஷேகம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

சிலையைப்பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த அமைச்சர் ஒவ்வொருவருடைய மத உணர்வுகளுக்கும் மதிப்பளிக்கப்படவேண்டும்என்றும் அது ஏனைய மதங்களை பாதிக்காத வகையில் அமைய வேண்டும் என்றும் தெரிவித்தார்.

# திருமலையில் ஆணின் சடலம்

திருகோணமலை - அலஸ்தோட்டம் கடற்கரைப் பகுதியில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சாம்பல்தீவு-சல்லிவாட்டு பகுதியில் வசித்து வந்த 38 வயதான நபரின் சடலமே நேற்று இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது

குறித்த சடலத்தை திருகோணமலை நீதிமன்ற மேலதிக நீதிவான்



பார்வையிட்டதை அடுத்து, பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது. (02)




காலைக்கதிர்
Kalaikkathir

# அழிக்கப்பட்டுள்ள தமிழர் தாயகத்தின் அத்திபாரங்கள் பிடுங்கப்படுகின்றனவா?

## ஸ்ரீநேசன் கேள்வி

பௌத்த பிக்குகளின் கோரிக் கையில் படையின ரின் பலப்பிரயோகத்துடன் தமிழர் தாயக நிலங்களி லுள்ள கலாசாரப்பதிவுகள், படிமங்கள் அழிக்கப்பட்டு அகற்றப்பட்டுஅவ்விடங்களில் புத்தர் சிலைகள், விகாரைகள் அமைக்கப்பட்டுவருகின்றன.

இதனை பௌத்த பிக்கு களின் கோரிக்கையில் -

தமிழர் தேச அத்திபா ரங்களைப் பிடுங்குவது போல் கலாசார அழிப்புகளை திட்டமிட்டு மேற்கொள்கின் றனர் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர் ஜி.ஸ்ரீ நேசன் தெரிவித்துள்ளார்

மட்டக்களப்பில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ் வாறு குறிப்பிட்டுள்ளார்

அவர் மேலும் தெரிவிக் கையில் -

இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்து தமிழர்களுக்கு எதிரான செயற்பாடுகளை சிங்கள அடிப்படைவாத ஆட்சியா ளர்கள் மேற்கொண்டனர்.

தற்போது,பாரியதமிழின அழிப்பின் பின்னர், தமிழர் தேச அத்திபாரங்களைப் பிடுங்குவது போல் கலாசார அழிப்புகளைத் தொடர்ந்து மேற்கொள்கின்றனர்.

தமிழின ஒடுக்கு முறை அச்சுறுத்தல், மிரட்டல், இன அழிப்பு, சொத்தழிப்பு, வெளியேற்றல், அகதிகளாக் கல், நாட்டை விட்டு அகற்றல், ஆக்கிரமித்தல், சிங்கள மயமாக்கல் என்ற பொறி முறைகளில் நடைபெற்றன.

1948 இல் இருந்து இன்று வரை அந்தப்பொறிமுறைகள் நடைபெறுகின்றன. 2009 இல் இன அழிப்புப் பொறி முறை அதியுச்சமாக நடை பெற்றது.

கடத்தல், கப்பம் பறித்தல், காணாமல்ஆக்குதல், வதைத் தல், வன்புணர்வாடல், அழித்தல், சடலங்களைக் காணாமல் ஒளித்தல், சாட்சியங்களை அழித்தல், மிரட்டல்என்றஅடிப்படையில் அது தொடர்ந்தது. இப்படியா கத் தமிழர் தேசம் பேரின அராஜகர்களால் முடியுமான வரை அழிக்கப்பட்டது.

தற்போது அழிக்கப்பட்ட தேசத்தின் அத்திபாரக்கற்கள் பிடுங்கப்படும் இறுதிச் செயற் பாடுகள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் நடை பெறுகின்றன.

பௌத்தசாசன, மகாவலி, வனவள, வனசீவராசிகள் அமைச்சுகள்போன்றவற்றின் வழிப்படுத்தலில்தொல்லியல் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகார சபை, வன வளத்திணைக்களம், வனஜீவராசிகள் திணைக் களம் போன்றவற்றின் செயற்படுத்தலில், பௌத்த பிக்குகளின் கோரிக்கையில் படையினரின்பலப்பிரயோகத் துடன் தமிழர் தாயக நிலங் களிலுள்ளகலாசாரப்பதிவுகள், படிமங்கள் அழிக்கப்பட்டு அகற்றப்பட்டு அந்த இடங்க ளில் புத்தர் சிலைகள், விகாரைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

வடக்கு கிழக்கில் தமிழர் களின் விடுதலைப்புலிகள் என்ற பலமான சக்தி மௌ னிக்கப்பட்டதன் பின்னர், சிங்கள பௌத்த மயமாக்கல் பொறிமுறை தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வரு கின்றது.

வவுனியாவில் வெடுக்கு நாறிமலை, முல்லைத்தீவில் குருந்தூர் மலை, மட்டக் களப்பில் குசலான மலை, நெலுக்கல் மலை, திரு கோணமலை கன்னியா, கோணேஸ்வரர்ஆலயம், அம்பாறையில் சங்கமான் கண்டி, மாணிக்கமடு, கஞ்சி குடிச்சாறு போன்ற இடங்களில் தமிழர் கலாசார அத்திபாரங்களைப் பிடுங்கி எறிந்துவிட்டு சிங்கள பௌத்த கலாசாரத்தை செயற்கையாக நடுகின்ற பலவந்தமான செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

அரசின் அதிகாரம், பௌத்தபிக்குகளின்ஆணை, படையினரின் கெடுபிடிகள்,



அடக்கு முறைகள் மத்தியில் தொல்லியல் என்ற போர் வையில் ஆக்கிரமிப்புகள் நடைபெறுகின்றன.

தமிழர்கள் தமிழ்த் தேசி யக்கட்சிகள், தமிழ் சிவில் அமைப்புகள், மதத்தலைவர் கள் 24 மணித்தியாலம்களும் விழிப்புடன் இருந்து போராட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழர்களின் பலமான போரியல் சக்தி பலவீனமான பின்புதான் இப்படியான ஆக்கிரமிப்புகள் தீவிரம் அடைந்துள்ளன.

எனவே தமிழ் இளை ஞர்கள் ஏன் ஆயுதம் ஏந்தி னார்கள்? என்பதற்கான நியாயத்தை தற்போது பேரினவாதிகள் மீண்டும் இளைய சந்ததியினருக்கு வெளிக்காட்டி வருகின்றனர்.

தமிழ் இளைஞர், யுவதிகளை போராட் டத்தை நோக்கித் தள்ளி யவர்கள் சிங்களப் பேரின வாதிகளேயன்றித்தமிழர்கள் அல்லர்.

தமிழர்களின் அஹிம் சையான போராட்டத்தை சிங்கள அரசு ஒடுக்கியதால், இளைஞர்கள் அஹிம்சை யில் நம்பிக்கை இழந்து ஆயுதங்களை ஏந்த வேண்டி ஏற்பட்டது. இப்போது சிங்கள இனவாதம் அதனையே மீண்டும்செய்துவருகின்றது. குட்டக் குட்ட குனிந்து கொடுப் பவன் மடையன் என்பார்கள்.

அன்று சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து முப்பதாண்டுகளாகக் குட் டுப்பட்ட தமிழர்கள் நிமிர்ந்த போது அது ஆயுதப் போராட் டமாக வெடித்தது என்பதை அதிகார வர்க்கம் மறக்கக் கூடாது. 2009 இன் பின்னர் மீண்டும் தமிழர்களுக்கு குட்டுகள் விழுந்த வண்ணம் உள்ளன.

14 ஆண்டுகளாக மீண் டும் குட்டுகள் தொடர்கின்றன. யுத்த சகதிக்குள் மறைந்து போன உண்மைகள் நீதிகள் இன்னும் வெளிக்கவில்லை. இனப்பிரச்சினைக்கான தீர்வு இன்னும் வழங்கவில்லை.

அன்பின் வடிவான கௌ தமபுத்தரின் சிலைகள், வடக்கு கிழக்கில் ஆக்கிரமிப்பின் அடையாளங்களாக மாற் றப்பட்டுள்ளன. அடுத்த தேர்தலுக்கான அடிப்படை வாத செயற்பாடுகள் ஆரம் பிக்கப்பட்டுவிட்டன.

சிங்கள பௌத்தத்தின் பாதுகாப்பு என்ற போர்வை யில் தமிழர் கலாசாரங்கள் பிடுங்கப்பட்டு சிங்கள பௌத்த மயமாக்கல் தீவிரமடைந்துள்ளது.

இணக்க அரசியல், அபிவிருத்தி அரசியல், மண்மீட்பு அரசியல் என்று புலம்பி பதவி சுகம், பண சுகம் அனுபவிக்கிறார்கள் தமிழின எடுபிடி அரசியல்வாதிகள். தினமும் போராட வேண்டிய நிலைக்குத் தமிழர்கள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

அவர்களை மீண்டும் அடக்கி ஒடுக்குவதற்கும், பயங்கரவாதிகளாகச் சித்தி ரிப்பதற்கும் பயங்கரமான சட்டத்தைக் கொண்டுவர சிங்கள அதிகார வர்க்கம் துடிக்கிறது. அதற்குத் தலைகளாட்ட தமிழர் விரோ தத் தமிழ் அமைச்சர்கள் தயாராகிவிட்டார்கள். அவர் களுக்கோ சலுகைகளில் கொண்டாட்டம், மக்களுக்கோ உரிமைக்கான போராட்டம் தொடர்கிறது. - எனத் தெரி வித்துள்ளார்.

# கறவை மாடுகள் திருட்டு: விசாரணைகள் ஆரம்பம்

கறவை மாடுகள் திரு டப்பட்ட சம்பவங்கள் தொடர் பில் நாடளாவிய ரீதியில் பல பிரதேசங்களில் இருந்து பல முறைப்பாடுகள் பதிவா கியுள்ளமை தொடர்பாக விவ சாய அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

கறவைமாடுகளைத்திருடி இறைச்சிக்காக படுகொலை செய்யும் கும்பல் பற்றிய தக வல் வெளியாகியுள்ளதுடன், கறவை மாடுகள் திருடப் படுவதும் அதிகரித்துள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

அண்மையில் நடை பெற்ற கூட்டமொன்றில் மாகாண மற்றும் மாவட்ட விவசாய அதிகாரிகள் அமைச்



சரிடம் இந்த விடயத்தை முன் வைத்துள்ளனர். இதனால் கறவை மாடுகளைப் பாது காக்கும் வகையில் பாதுகாப்பு கமெராக்கள் மற்றும் சங்கி லிகளை விவசாயிகள் பயன் படுத்த வேண்டும் என விவ சாய அதிகாரிகள் தெரிவித் துள்ளனர். நாளொன்றுக்கு 20 முதல் 30 லிற்றர் வரை பால் கறக்கக்கூடிய கறவை மாடுகள் இவ்வாறு திருடப் பட்டுள்ள நிலையில் மாடுதிரு டிய வர்களுக்கு எதிராக நடவ டிக்கை எடுக்கவும் பணிப் புரை விடுக்கப்பட்டுள்ளது.

# திறைசேரியின் உண்டியல்கள் 19 ஆம் திகதி ஏலவிற்பனை

90 ஆயிரம் மில்லியன் ரூபா மதிப்பிலான திறைசேரி உண்டியல்கள், எதிர்வரும் 19 ஆம் திகதி ஏல விற்பனை ஊடாக வழங்கப்படும் என இலங்கை மத்திய வங்கி அறிவித் துள்ளது.

இதன்படி, 91 நாள்கள் முதிர்வுக்காலத்தைக்கொண்ட 40 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும்,

182 நாள்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 25 ஆயிரம் மில்லியன் ரூபாய் பெறுமதியானதிறைசேரிஉண் டியல்களும். 364 நாள்கள் முதிர்வுக்காலத்தைக்கொண்ட 25 ஆயிரம் மில்லியன் ரூபா் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், ஏல விற் பனை ஊடாக வழங்கப்பட உள்ளதென மத்திய வங்கி அறிவித்துள்ளது.

# பொதுமக்கள் மீண்டும் கொழும்பு திரும்ப விசேட பஸ்கள் மற்றும் ரயில் சேவைகள்

## புத்தாண்டை முன்னிட்டு, புத்தாண்டை முன்னிட்டு,

சொந்த ஊர்களுக்கு சென்றபொதுமக்கள், மீண்டும் கொழும்புக்கு திரும்புவதற்கு சில விசேட ரயில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதி வரை குறித்த விசேட ரயில் சேவையில் ஈடுபடுத் தப்படவுள்ளன என ரயில்வே திணைக்களத்தின் பிரதி போக்குவரத்து அதிகாரி என்.ஜே. இந்திபொலகே தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நேற்று முதல் விசேட பஸ்களும்



சேவையில் ஈடுபடுத்தப்பட உள்ளன என, இலங்கை போக்குவரத்து சபை தெரி வித்துள்ளது.

கொழும்பிலிருந்து வெளி பிரதேசங்களுக்கு செல்வ தற்காகவும், பஸ்கள் சேவை யில் ஈடுபடுத்தப் படுகின்றன என இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.



# Malaysia Tour

## 5 DAYS 4 NIGHTS








### INCLUSION

- 04 Night stay in Kuala Lumpur
- Daily breakfast at hotel
- Return AirTicket
- Getting Highland tour with cable car
- City tour on arrival day
- Evening tour to twin tower
- Batu caves temple visit
- Putrajaya city tour

**LKR 148,000.00**
For Early Booking

**Travel Date: 19 - 23 May 2023**

**Semba Services (Pvt) Ltd.**
551A, Kasthuriyar Road ,Jaffna
+94 77 307 8799

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.04.2023 இல் வெளியிடப்பெற்றது.
இத்துடன் நேற்றைய மாலைப்பதிப்பின் பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 04

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 02 சனிக்கிழமை 15.04.2023 கதிர் 29

## குழம்பிப்போயுள்ள மொட்டு எம்.பிக்கள்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தற்போது மூன்றாகப் பிளவுபட்டுள்ள நிலையில், அக்கட்சியில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், அடுத்தகட்ட நகர்வு பற்றி முடிவெடுப்பதில் குழப்பிப் போயுள்ளனர்.

டலஸ் தலைமையில் அணியொன்று வெளியேறி விட்டது. பிரசன்ன ரணதுங்க, கஞ்சன விஜேசேகர, ரொான் ரணசிங்க எனரணில் விக்கிரமசிங்க பக்கம் மற்று மொரு அணி நிற்கின்றது. ராஜபக்சக்களுக்கு விசுவாச மாக ஓர் அணி செயற்பட்டு வருகின்றது.

இந்நிலையில் எதிர ணிக்குப் போக 2

# வன்னியில் 700 ஏக்கர் காணிகளை சீனாவிற்கு விற்கிறது இந்த ஆட்சி

## பொது அமைப்புக்கள் குற்றச்சாட்டு

**வன்னிப் பகுதியில் 700 ஏக்கர் காணியை சீனாவிற்கு விற்பதற்கு ஆட்சி யாளர்களமுயற்சிக்கின்றனர் என்று பொது அமைப்புக்கள் குற்றஞ்சாட்டு கின்றன. வடக்கில் காணி இல்லாத 15 ஆயிரம் குடும்பங்களுக்குக் காணி வழங்க முன்வராத அரசு சீனாவுக்கு 700 ஏக்கர் காணி வழங்க முன்வருவது ஏன் என்று என்றும் அவை கேள்வி எழுப் பியுள்ளன.**

**“சீனாவிடமிருந்து வாங்கிய கடனை மீளசெலுத்த முடியாத இன்றைய ஆட்சிய-ாளர்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள இரணைமடு குளத்தின் தெற்குப் புறமாக உள்ள பகுதியில் 500 ஏக்கர் வனப்பகுதியை சீனாவிற்கு விற்பதற்கும், இயக்கச்சியை அண்டிய பகுதியில் 200 ஏக்கர் காணியை சீனாவிற்கு விற்பதற்கு ஆட்சியாளர்கள் முயற்சி செய்கின்றனர். இதனால் வடக்கு மக்களுக்குப் பெரும் பாதிப்பு ஏற்படப்போகின்றது” என்று கரைச்சி பிரதேச கிராம அபிவிருத்தி சங்கங்கள் மற்றம் மாதர் கிராம அபி விருத்தி சங்கங்களின் சமாச தலைவர் கருப்பையா ஜெயக்குமார் தெரிவித்தார். கிளிநொச்சியில் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-**



வடக்கு மாகாணத்தின் இதய பகுதி யாக இருக்கின்ற இரணைமடுக் குளத்தின் தெற்காக உள்ள 500 ஏக்கர் காணிகளை சீனாவிற்கு கொடுத்தால் சீனர்கள் அங்கு குடியேறுவார்கள். அல்லது அவர்க ளது ஆய்வகங்கள் நிறுவப்படும் அல்லது அவர்களது கேந்திர முக்கியத்துவம் மிக்க நிலையங்கள் அமைக்கப்படும். இது இலங்கைக்கு மாத்திரமல்ல குறிப்பாக முல்லைத்தீவு, கிளி நொச்சி மக்களுக்குப் பெரும் பாதிப்பு.

இலங்கைபெற்றுக்கொண்டகடனுக்காக வட பகுதியில் இருக்கின்ற முக்கியம ான இடங்களை ஆட்சியாளர்கள் சீனாவிற்குகொடுக்கக்கூடாது. அதுஎங்கள் வாழ்வாதாரத்தையும், அடுத்துவரும் சந்ததி களையும் பாதிக்கும்.

கிளிநொச்சிமாவட்டத்தின்கௌதாரிமு-னை பகுதியில் கடலட்டை பண்ணை அமைப்பதற்காககடல்பகுதியைவிற்பதற்கான முயற்சியும் நடந்தது. மக்கள் பிரதிநிதிகள் மற்றம் பொது அமைப்புக்களின் கடுமை யான எதிர்ப்பின் பின்னர் அந்த நடவடிக்கை கைவிடப்பட்டுள்ளதாக அறியக்கூடியதாக இருக்கின்றது.

அந்த விடயம் கடந்து போய் இருக்கின்ற ஓரிரு ஆண்டுகளிற்குள் இந்தவிடயம்சூடுபிடித்திருக்கின்றது. குறித்த இரு விடயங்களையும் ஏற்றுக்கொள்ள முடியாது. அத னால் இங்குள்ள மக்கள் பாதிக் கப்படுவார்கள் என்ற விடயமும் இதில் அடங்கியிருக்கின்றது.

போரால் மிக மோசமாகப் பாதி க்கப்பட்ட வன்னி மக்கள் இப்போது தான் கொஞ்சம் கொஞ்சமாக அதிலிருந்து மீண்டு வருகின்றார்கள் .

இந்த நிலையில் அவர்களின் ம ண்ணைச் சீனாவிற்குத் தாரை வார்ப்பது தமிழ் மக்களை மட்டுமல்ல ஒட்டுமொத்த இலங்கையர்களையும் படுகுழியில் தள்ளிவிடும்.

வாங்கிய கடனுக்காக சீனா வுக்கு இடங்களை கொடுப்பது என்றால், இந்தி யா, பாகிஸ்தான், ஐரோப்பிய நாடுகளில் வாங்கிய கடன்களிற்காக இன்னும் பல இடங்களை கொடுக்கவேண்டிய சூழல் இலங்கை அரசுக்கு ஏற்படும்.

வடக்கிலிருந்து தமிழ் மக்களை அச்சுறுத்தி வெளியேற்றுவதற்காகத் தான் இரணைமடுவிற்குத் தெற்காக 500 ஏக்கரல் நிலத்தைச்சீனாவிற்குக்கொடுக்கமுயற்சிக்கி றார்கள். குரங்குகளையும் சீனாவிற்கு விற்கின்றார்கள். சம நேரத்தில் குரங் குகள் வாழக்கூடிய வனப்பகுதிக ளையும் சீனாவிற்கு விற்கின்றார்கள். அடுத்து மக்களையும் கொடுப்பார் களோ என்ற அச்சம் ஏற்பட்டிருக் கின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் மட் டும் 3000 குடும்பங்கள் காணிகள் இல்லாமல் உறவினர்கள் வீடுகளில் வாழுகின்றார்கள். அதேபோன்றுதான் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா மாவட்டத்திலும் பல ஆயி ரக்கணக்கான குடும்பங்கள் சொந்தக் காணி இன்றி இருக்கின்றன. வடக்கு மாகாணத்தில் 15ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் காணி இல்லாமல் வாழ்கின்ற சூழல் இருக்கின்றது.

வடக்கு மகாணாத்தில் போரால் பாதி க்கப்பட்ட பகுதியில் இருக்கின்ற மக்களிற்கு காணிகளை கொடுப்பதற்கு முன்வராத ஆட்சியாளர்கள், சீனாவிற்கு அதனைக் கொடுக்க நினைப்பதானது எமக்கு பலத்த சந்தேகங்களை எழுப்புகின்றது.

நூற்றாண்டு காலமாக மலையகத்தில் இருக்கின்ற மக் கள் லயன் வாழ்க்கைவாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். நாட்டின் பொருளாதாரத்திற்கு மிக முக்கிய பங்களிப்பை செய்பவர்களாக அவர் கள் இருக்கின்றபோதும் அவர்கள் இன்னும் லயன் வீடுகளிலேயே

அவர்களுக்கெல்லாம் காணிகளைக் கொடுக்க மறுக்கும் ஆட்சியாளர்கள் சீனாவிற்கு மட்டும் ஏன் இவ்வாறு காணிகளை அள்ளிக்கொடுகிறார்கள்? – என்று அவர் தெரிவித்தார்.

### பொருளாதார மந்த நிலையால் புதிய சிக்கல்

## பல பெரிய நிறுவனங்களுக்கு புத்தாண்டுடன் மூடு விழா

### 30 வீத நிறுவனங்களில் உற்பத்தி வீழ்ச்சி

இலங்கையில் உள்ள பல பெரிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் சித்திரைப் புத்தாண்டுக்குப்பின்னர் தமது பணிகளை நிறுத்தவுள்ளதா கத் தெரிவிக்கப்படுகின்றது. பொருளாதார மந்த நிலையே இதற்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

முதலீட்டுச்சபையில்(BOI) பதிவுசெய்யப்பட்ட பல பெரிய நிறுவனங்களும் சிறிய மற் றும் நடுத்தர (SME) துறையில் உள்ள பல நிறுவனங்களும் ஏப்ரல் புத்தாண்டுக்குப் பிறகு இலங்கையில் செயல்பாடு களை குறைக்க அல்லது இடைநிறுத்த விரும்புவதாக கூறப்படுகிறது.

முதலீட்டுச் சபையில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்க ளில் குறைந்தது 30 சதவீத மானவை தமது உற்பத்தி மற்றும் பணிகளைக் ஏற்க னவே குறைத்துக்கொண்டி ருப்பதாகவும், அவற்றில் பல புத்தாண்டு விடுமுறைக்குப் பிறகு மீண்டும் செயல்பட வாய்ப்பில்லைஎன்றுதகவல்கள் கூறுகின்றன.

அதேசமயம் சிறு மற்றும் நடுத்தரக்கைத்தொழில்துறை யில் உள்ளவர்களில் 40 சத வீதமான நிறுவனங்களும் தமது பணிகளைக் குறைக்க அல்லது மூட முடிவு செய்துள் ளதாக அந்தத் தகவல்கள் மேலும் கூறுகின்றன.

இலங்கையில் நிலவும் பொருளாதார மந்தநிலை, பொருளாதார மீட்சியில் ஏற் படுள்ள மந்தம் மற்றும் உலகளாவிய பொருளாதாரப் பின்னடைவு மற்றும் பிற பிராந்தியங்களுக்கு வர்த்த கம் கைமாறியதன் காரண மாக கொள்வனவுக்கு ஆட்கள் இன்மைஎன்பவையேஇதற்குக் காரணம் என உற்பத்தி யாளர்கள் சங்கத்தின் (MA) புதிய தலைவர் தம்மிக்க பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஏனைய நாடுகளைவிட 25 வீதம் விலை அதிகம் என்பதாலும், உற்பத்திச் செலவு அதிகரித்துள்ள தாலும் சந்தையில் இலங்கை தனது போட்டித் தன்மையை இழந் துள்ளது என்கிறார் அவர்.

## பிரதமர் பதவியை இழந்தாரா பீரிஸ்?

### டிலான் விளக்கம்

எமது அணியில் உள்ள நாடாளு மன்ற உறுப்பினர்கள் பதவிகளுக்காக அரசி யல் நடத்துவது கிடை யாது. கொள்கை அரசியலையே முன் னெடுக்கின்றோம்.

– இவ்வாறு டலஸ் அணி நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.



பதவிகளை விட்டுவிட்டே மொட்டுக் கட்சியில் இருந்து நாம் வெளியேறினோம். பேராசிரியர் ஜி.எல்.பீரிஸுக்கு பிரதமர் பதவி வழங்கப்படும் எனக் கூறப்பட்டது. நாடாளு மன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்வுக்கான வாக்கெடுப்பின்போது டல ஸின் பெயரை அவர் முன் மொழியாமல் இருந்திருந் தால் தற்போது பீரிஸ்தான் பிரதமர். – எனவும் டிலான் பெரேரா குறிப்பிட்டார். (02)

## சிசு இறப்பு: திங்களன்று விசாரணை



பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் மருத்து வக் கண்காணிப்பின்மை காரணமாக சிசுவொன்று உயிரிழந்ததாக அறிக்கை யிடப்பட்ட சம்பவம் தொடர்பி லான விசாரணையை, நாளைமறுதினம் திங்கட் கிழமைக்கு நிர்ணயித்து பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அன் றைய தினம், பருத்தித்துறை திடீர் இறப்பு விசாரணை அதி காரி மன்றில் முன்னிலை யாகி சாட்சியமளிக்கவுள்ளார்.

புலோலி வடக்கு, கூவில் பகுதியை சேர்ந்த 2

## களனி கங்கையில் தவறி விழுந்து ஒருவர் மாயம்!

களனி கங்கை நீரோட்டத் தில் தவறி விழுந்து ஆண் ஒருவர்காணாமல்போயுள்ளார்.

கேகாலை – எட்டியாந் தோட்டைப் பகுதியில் இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

எட்டியாந்தோட்டை – அத்தனகல பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய குறித்த நபர், உணவு உட்கொண்ட பின்னர், களனி கங்கையில் கைகளைக் கழுவுவதற்காகச் சென்றபோது, நீரோட்டத்தில் இழுத்துச் செல்லப்பட்டார் என்று பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

களனி பிரதேசத்தில் இருந்து யாத்திரைக்காகச் சென்று மீண்டும் 2

## இந்தியாவிற்கு தப்பிப்போக முயன்றவர் இன்று கைது

(ந.லோகதயாளன்)

இலங்கையில் இருந்து படகு மூலம் இந்தியாவிற்குத் தப்பிச் செல்ல முற்பட்ட இந்தி யர் ஒருவரும் அவருக்கு உதவிய ஒருவரும் தரைப் படையினரால் கைது செய்-யப்பட்டு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்தியாவில் இருந்து 2020ஆம் ஆண்டு இலங் கைக்கு வந்த சமயம் ஐஸ் போதைப் பொருள் வைத்தி ருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்ட நபரே இவ்வாறு 2

## புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தினை மீளப்பெறாவிடின் நீதிமன்றம் செல்வோம்

### அரசுக்குச் சஜித் அணி பகிரங்க எச்சரிக்கை

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை அரசு உடனடியாக மீளப்பெற வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

குறித்த சட்டமூலத்தை சட்டமா அதிபர் தயாரிக்கவில்லை எனவும், தனக்கு விசுவாசமான சட்டத்தரணிகள் ஊடாகவே அரசு இதனைச்செய்துள்ளது எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் கிரியெல்ல சுட்டிக்காட்டினார்.

அத்துடன், மேற்படி சட்டமூலத்துக்கு எதிராகத் தமது அணி நீதிமன்றம் செல்லும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (02)



## சமுர்த்தி வங்கி ஊழியர்கள் இன்று முதல் போராட்டம்

சமுர்த்தி வங்கி ஊழியர்கள் இன்று முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுள்ளனனர்.

சரியான பதவி உயர்வு முறைமை இல் லாமை, சமுர்த்தி அதி காரிகளுக்குப் பயணக் கொடுப்பனவுகளும் அலுவலகக் கொடுப் பனவுகளும் வழங்கப் படாமை உள் ளிட்ட காரணங்களை முன் வைத்து இந்தப் பணிப் புறக்கணிப்பை முன்னெடுக்கின்றோம் என்று சமுர்த்தி தொழிற் சங்க கூட்டமைப்பின் பிரதான செயலாளர் டபிள்யூ. ஜோதிரத்ன தெரிவித்துள்ளார்.

சமுர்த்தி அதி காரிகளுக்கான கொடுப்பனவுகள் கடந்த காலங்களில் வழங்கப்படவிலை என் றும் அவர் குறிப்பிட் டுள்ளார். (02)

# தரைப்படையோடு இணைந்து யாழ்ப்பாணத்தில் புதுவருடம்











வடக்கு மாகாண ஆளுநர் செயலகம், யாழ். மாவட்ட செயலகம், யாழ். பாதுகாப்பு படைத் தலைமையகம் இணைந்து திய சித்திரை புத்தாண்டு கொண்டாட்டம் யாழ்ப்பாணம் துரையப்பா மைதானத்தில் சிறப்பாக இடம் பெற்றது

ஆண் பெண் இரு பாலருக்குமான சைக்கிள் ஓட்ட போட்டி, மரதன் ஓட்ட போட்டி, கோலம் போடுதல், கயிறு இழுத்தல், கிளித்தட்டு விளையாட்டு, பலூன் உடைத்தல், முட்டி உடைத்தல் ஆகிய போட்டிகள் இடம் பெற்றன.

வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப் பட்டன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட தரைப்படைக் கட்டளை தளபதி, யாழ் மாவட்டச் செயலாளர், வடக்கு மாகாண பிரதம செயலாளர், இராணுவ உயர் அதிகாரிகள் வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் மாவட்ட செயலக உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## இந்தியாவிற்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தப்பிச் செல்ல முயன்றார் என்று தெரிவிக் கப்பட்டது.

அவர் மீதான வழக்கு விசாரணை தொடர்ந்துவரும் நிலையில் அவரது கடவுச் சீட்டு நீதிமன்றத்தால் முடிக்கப்பட்டுள்ளது. இதனால் குருநாகலைச் சேர்ந்த ஒருவரின் உதவியுடன் மன்னார் வந்த அந்த நபர், அங்கிருந்து படகு மூலம் தமிழ்நாட்டிற்குத் தப்பிச் செல்ல முற்பட்டபோது கைது செய்–யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தமிழ்நாடு இளையான்குடியைச் சேர்ந்த 38 வயது நபரும் அவருக்கு உதவிய இலங்கையின் குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவருமே கைது செய்யப்பட்டனர்.

## குழம்பிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டிய நிலை ஏற்பட்டால் என்ன செய்வதென்று மொட்டுக் கட்சிக்குள் உள்ளக கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

அவ்வாறு சென்றால் நாமல் ராஜபக்சவை எதிர்க்கட்சித் தலைவராக்கவேண்டும் என மொட்டுக் கட்சிக்குள் ஓர் அணி தெரிவிக்கின்றது. பஸிலை நாடாளுமன்றம் அழைத்து வந்து அவரை எதிர்க்கட்சித் தலைவராக்குவது நல்லது என்ற யோசனையும் முன்வைக்கப்பட்டுள்ளது.

அதற்கு பஸில் இரட்டைக் குடியுரிமையை துறக்க வேண்டும். அவர் நாடாளுமன்றம் வர விரும்பினால் தேசியப் பட்டியலை விட்டுக்கொடுக்க ஜயந்த கெட்டகொட தயார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, அடுத்த ஜனாதிபதித் தேர்தல்வரை ரணில் விக்கிரமசிங்கவுடன் இருப்பதுதான் நல்லது என்ற ஆலோசனையும் முன்வைக்கப்பட்டுள்ளது என அரசல் புரசலாகக் கதை அடிபடுகின்றது. (02)

## களனி...

தமது சொந்த இடத்திற்குத் திரும்பிய நபரே இவ்வாறு காணாமல்போயுள்ளார்.

அவரைத் தேடும் பணிகளில் பொலிஸாரும், கடற்படையினரும் ஈடுபட்டுள்ளனர். (02)

## சிசு இறப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெண் ஒருவர், பிரசவத்துக்காக பருத் தித்துறை ஆதார மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவருக்கு ஊசி மருந்துகள் ஏற்றப்பட்டுள் ளன. பின்னர், சிசு இறந்து பிறந்ததாக அறிவிக்கப் பட்டது.

இது தொடர்பில் நடத்தப்பட்ட உடற்கூற்றுப் பரிசோதனையில், தாயா ருக்கு ஊசி செலுத்தப்பட்டதன் பின்னர், உரிய முறையில் மருத்துவக் கண்காணிப்பு இன்மையால் கருப்பை வெடித்து, சிசுவுக்கு குருதி கடத்தப்படுவது தடைப் பட்டுள்ளமை உறுதியானது எனத் தெரிவித்து, மேலதிக விசாரணைக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி கோரியுள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண், பருத்தித்துறை ஆதார மருத் துவமனையில் தொடர்ந்து சிகிச்சை பெற்றார். இது தொடர்பில் பெண்ணின் உறவி னர்களால் முறைப்பாடும் செய்யப்பட்டிருந்தது.

இந்தநிலையில் பொலிஸார் நீதிமன்றத்தில் அறிக் கையிட்டதைத் தொடர்ந்து, இது தொடர்பான விசாரணையை நாளைமறுதினம் திங்கள் கிழமை நடத்த உத்தரவிடப் பட்டுள்ளது. (02)

# தந்தையைத் தாக்கி கொலைசெய்த மகன்

## பதுளையில் கொடூரம்

மகனின் தாக்குதலுக்கு இலக்காகி 57 வயதுடைய தந்தை சாவடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் பதுளையில் இடம் பெற்றுள்ளது.

பதுளை, கஹட்டரூப்ப பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்பகஸ்கொட – கெந்த கொல்ல பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் தந்தைக்கும், மகனுக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதம் பின்னர் கைகலப்பாக மாறியுள்ளது.

இதன்போது மகனின் தாக்குதலில் படுகாயமடைந்த தந்தை, பதுளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காகக் கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். எனினும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

30 வயதுடைய மகன் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை கஹட்டரூப்ப பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (02)

# முன்னாள் சிப்பாயால் ஒருவர் சுட்டுக்கொலை

குடும்பஸ்தர் ஒருவர் முன்னாள் தரைப் படைச் சிப்பாயால் சுட்டுக்கொல்லப்பட் டுள்ளார்.

சீதுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ராஜபக்சபுர பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ராஜபக்சபுர பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய குடும்பஸ்தரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவருக்கும் சந்தேகநபருக் கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் காரணமாக துப்பாக்கியால் சுட்டு இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபரான ஓய்வுபெற்ற இராணுவச் சிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (02)



# போலி ஆவணம் தயாரித்த ஒருவர் கைதானார்

கிராம அலுவலர் உறுதிப்படுத்தலை போலியாக தயாரித்த குற்றச்சாட்டில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் நடைபெற்ற கச்சத்தீவு திருவிழாவில் நகைகளை திருடிய குற்றச் சாட்டில் தென்னிலங்கையை சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

அவர் மீது ஊர்காவற்றுறை நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட சந்தேகநபரை பிணையில் செல்ல மன்று அனுமதித்துள்ளது.

சந்தேகநபருக்கான பிணை ஆவணங்களுக்காக கிராம அலுவலர் உறுதிப் படுத்தல் கடிதம் போலியாகத் தயாரிக்கப் பட்டுள்ளது.

போலியான இரப்பர் முத்திரை தயாரிக்கப்பட்டு இந்த உறுதிப்படுத்தல் கடிதம் தயாரிக்கப்பட்டதுடன், சந்கேகநபர் தொடர்பான போலியான தகவல்களும் வழங்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் விசேட குற்ற விசாரணை பிரிவு பொறுப்பதிகாரி குண. நிரோஜன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் விசாரணைகளை முன்னெடுத் திருந்தனர்.


போலியான ஆவணங்களைத் தயாரித்தவர் தலைமறைவாகியிருந்த நிலையில், வெள்ளிக்கிழமை அவர் மானிப்பாயில் வைத்துப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் யாழ்ப்பாணம், திருநகரைச் சேர்ந்த 43 வயதுடையவர் என்றும் அவரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் விசேட குற்ற விசாரணைப்பிரிவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# கீரிமலையில் நாவலருக்கு திருவுருவச்சிலை திறப்பு

## சிவபூமி அறக் கட்டளையின் ஏற்பாட்டில்







சிவபூமியில் சைவத்துக்கும் தமிழுக்கும் பெருந்தொண்டாற்றிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் திருவுருவச்சிலை சிவபூமி அறக்கட்டளைஊடாகஅன்பளிப்புசெய்யப்பட்டு செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகனால் நேற்று (வெள்ளிக்கிழமை) திறந்து வைக்கப்பட்டது. நாவலர்பெருமான்சைவநெறி தழைத் தோங்கவும், தமிழ் மொழி செழித்து வளரவும் பெரும் பணியாற்றியவராவார். யாழ்ப்பாணம், நல்லூர் கந்தப்பிள்ளை, சிவகாமி அம்மையார் ஆகிய இருவருக்கும் புதல்வனாக 1822 ஆம் ஆண்டு அவதரித்தார்.

இலங்கையும், இந்தியாவும் அந்நியர் ஆட்சியின் கீழ் இருந்த போது சைவமும்,

தமிழும் பெரும் ஆபத்துக்களை எதிர்நோக்கிய காலப் பகுதியிலே தோன்றியவர் தான் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்.

வரலாற்றுக்கு முற்பட்ட சமயமாகவும், ஈழம் வாழ் மக்களின் பெரும்பாலானோரது உள்ளத்துள் ஒளிவிளக்காய் சுடர்விட்டிலங்குவதுமான சைவ சமயம் அந்நியரது செல்வாக்கு வலிவுற்றிருந்த காலத்தில் சிறிது நலிவுற்றிருந்தது.

இலங்கைக்கு வர்த்தக நோக்கோடு வந்த அந்நிய ஆட்சியாளர் அரசியலாதிக்கத்தைக் கைப்பற்றவும் தற்சமயம் கொள்கையை பரப்பவும் எண்ணங்கொண்டு கல்வி வழிப்பிரசாரம் செய்யத் தலைப்பட்டனர்.

அந்நியவெற்று நாகரீகப் போக்கில் ஈடுபாடு கொண்ட மக்கள் சுயசமய கலாசார வழிகளை மறந்து வாழ்வாராயினர்.

இவ்வாறு சைவ சமயம் நலிவுற்றிருந்த வேளையில் நாவலர் பெருமான் தனது சொல்லாலும் எழுத்தாலும் மக்கள் அகக் கண்களைத் திறந்து அவல நிலையை அவர்களுக்கு உணர்த்தியதோடு சைவமும்,

தமிழும் மீண்டும் புத்துயிர் பெறுவதற்காக தம்மாலியன்ற அத்தனை பணிகளையும் செய்தார். அவரின் கல்விப் புலமையையும், நாவன்மையையும், சைவத் தமிழ் பணிகளையும் பாராட்டி திருவாடுதுறை ஆதீனம் அவருக்கு 'நாவலர்' என்ற பட்டத்தை வழங்கியது. சைவம் காத்த நாவலர் பெருமானை சைவமக்கள் ஐந்தாம் சமயக்குரவர் எனப் போற்றுகின்றனர்.

சிவ சமயத்தை அழிய விடாது பாதுகாக்க நாவலர் பல முயற்சிகளை மேற்கொண்டார். சைவ சமயத்தவர் ஒரு சிலரிடம் காணப்பட்ட தவறான பழக்க வழக்கங்கள், செயல்கள் என்பவற்றை நீக்க முயன்றார். சைவப் பாடசாலைகளை நிறுவினார்.

திருக்கேதீஸ்வரம், கீரிமலைச் சிவன் கோயில் என்பனவற்றின் தொன்மைச் சிறப்புக்களை மக்களுக்கு எடுத்துக் கூறி அவற்றைப் புனரமைத்து நித்திய, நைமித்திய பூஜைகளுக்கு வழிவகுக்குமாறு சைவ மக்களுக்கு விஞ்ஞாபனம் விடுத்தார்.

தம் வாழ்நாள் பூராவும் தமிழுக்கும் சைவத்துக்கும் சேவையாற்றி வந்த நாவலர் பெருமான் 1879 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் மக நட்சத்திரத்தில் இறை பதம் அடைந்தார். இவ்வாறான நாவலர் பெருமான் தொடர்பில் எமது எதிர்காலச் சந்ததியினருக்கு உணர்த்தும் பொருட்டே கீரிமலை புதின தீர்த்தங்கொண்ட கடற்கரையில் சிவபூமி அறக்கட்டளையால் ஈழத்தில் தற்போது வாழ்ந்துகொண்டிருக்கும் நடமாடும் ஆறுமுகநாவலரான ஆறு.திருமுருகனால் வலி.வடக்கு பிரதேசசபையின் அனுசரரணையுடன் நாவலர் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

பாரிய யுத்த அழிவுகளுக்குப் பின்னர் மீண்டும் மக்கள் வரலாற்றுப் பெருமை மிக்க கீரிதலைக்கு வந்தவுடன் அங்கு பிறமத செல்வாக்கைத் தடுப்பதற்காகவும் இந்துமதத்தைக் காக்கவும் சிவபூமி அறக்கட்டளையும் அதன் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகனும் பெரும் பங்காற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 17 வயது மாணவன் நீரில் மூழ்கி இறப்பு



நீரில் அடித்துச்செல்லப்பட்டு காணாமல்போன பாடசாலை மாணவனின் சடலம் வெள்ளிக்கிழமை அக்குரலை கடற்கரையில் கண்டெடுக்கப்பட்டுள்ளார் என அம்பலாங்கொடை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அம்பலாங்கொட தர்மசோக வித்தியாலயத்தில் 11 ஆம் ஆண்டில் கல்வி கற்கும் 17 வயதுடைய பாடசாலை மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை பிற்பகல் நீராடச் சென்று நீரில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல்போன நிலையில் மாணவனின் சடலம் நேற்று (வெள்ளிக்கிழமை) அக்குரலை கடற்கரையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

அதே வயதுடைய மேலும் இரு மாணவர்களுடன் உயிரிழந்த மாணவர் கடலில் நீராடிக் கொண்டிருந்த வேளையில், மூவரும் கடலில் அடித்துச் செல்லப்பட்டதுடன், ஏனைய இருவரையும் பிரதேசவாசிகள் காப்பாற்றியுள்ளனர்.

மேலும் இரு நண்பர்களுடன் கடலில் நீராடிக் கொண்டிருந்த வேளையில், மூவரும் கடலில் அடித்துச் செல்லப்பட்டதுடன், ஏனைய இருவரையும் பிரதேசவாசிகள் காப்பாற்றியுள்ளதுடன் இரு மாணவர்களும் பலப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் இருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த மூன்று மாணவர்களும் புத்தாண்டு விடுமுறை காரணமாக நண்பர் ஒருவரின் வீட்டுக்குச் செல்வதாக வீடுகளுக்குத் தெரிவித்துவிட்டு கடலில் குளிக்கச் சென்று கொண்டிருந்த போதே திடீர் அலையில் அடித்துச் செல்லப்பட்டனர் எனத் கூறப்படுகின்றது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அம்பலாங்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# களுத்துறையில் ஓட்டோ தீப்பற்றி எரிந்து நாசம்



களுத்துறை பிரதேசத்தில் புத்தாண்டை முன்னிட்டு உறவினர் வீடுக்கு சென்ற குழுவினரை ஏற்றிச் சென்ற ஓட்டோ ஒன்று திடீரென தீப்பற்றி எரிந்துள்ள சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ஓட்டோ முற்றாக எரிந்து சேதமடைந்துள்ளதாக களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ராகம பிரதேசத்தில் வசிக்கும் குழுவினர் அக்கலவத்தைப் பகுதிக்குச் சென்று கொண்டிருந்தபோதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளாகக் கூறப்படுகின்றது.

இந்த தீவிபத்தில் பயணிகள் யாருக்கும் காயம் ஏதும் ஏற்படவில்லை எனவும் இது தொடர்பாக விசாரித்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# குடும்பத்தினருடன் மஹிந்தர் புத்தாண்டுக் கொண்டாட்டம்









முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குடும்பத்தினருடன் சித்திரை புத்தாண்டை கொண்டாடிய புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வருகின்றன.

சோபகிருது என்ற பெயருடன், சித்திரைப் புத்தாண்டு வாக்கிய பஞ்சாங்கத்தின் பிரகாரம், நேற்று (வெள்ளிக்கிழமை) பிற்பகல் 2 மணி 3 நிமிடத்திலும், திருக்கணித பஞ்சாங்கத்தின்படி, பிற்கல் 2 மணி 59 நிமிடத்திலும் புதுவருடம் பிறந்துள்ளது.

இதன்போது மஹிந்தவின் பாரியார் சிரந்தி ராஜபக்ஷ மற்றும் மஹிந்தவின் மூத்த புதல்வரான நாமல் ராஜபக்ஷ, இளைய புதல்வர், மருமகள், பேரப்பிள்ளைகள் ஆகியோர் இணைந்து புத்தாண்டை வரவேற்றுள்ளனர்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## முக்கியமான காலப்பகுதி

இலங்கையின் கடன் மறுசீரமைப்புத் தொடர்பான பேச்சுக்கள் தொடங்கப்படவுள்ளன. பாரிஸ் கிளப் இது தொடர் பான அறிவிப்பை விடுத்துள்ளது. அதேநேரம் இந்தியா, ஜப்பான், பிரான்ஸ் நாடுகளும் கடன்மறுசீரமைப்புத் தொடர்பில் கூடி ஆராய்ந்துள்ளன. அத்தோடு பொது தளம் ஒன்றில் இது தொடர்பில் பேசப்படவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளன.

பன்னாட்டுச் செலாவணி நிதியத்தின் (ஐஎம்எவ்) கடனைப் பெறும் அளவிற்கு கடன்மறுசீரமைப்புப் பணிகள் இலகு–வானதாக அமையப்போவதில்லை என்பதையே அண்மைய நாட்களில் வெளியாகும் செய்திகள் வெளிப்படுத்துகின்றன. கடன்மறுசீரமைப்பு இன்றி இலங்கையின் பொருளாதார மீட்சி இல்லை என்கிற நிலையில் இந்த மிகப் பெரும் பணியை ஏப்ரல் மாத இறுதிக்குள் செய்து முடிக்க முடியும் என்று மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் முன்னதாகத் தெரிவித்திருந்தார்.

இலங்கைக்குப் அதிகளவில் கடன் தந்த பெரு நாடுகள் நிதி நிறவனங்கள் என்று அனைத்துத் தரப்பினரும் கடன் மறுசீரமைப்புக்கு முழுமையாக ஒத்துழைப்புத் தருவோம் என்று ஏற்கனவே பன்னாட்டுச் செலாவணி நிதியத்திற்கு உத்தரவாதம் வழங்கியிருந்தனர். என்பதால் இந்தப் பணிகளில் தடங்கல் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை என்றே கருதப்படுகின்றது. ஆனாலும் அது அவ்வளவு சுலபமான பணியாகவும் அமையப்போவதில்லை.

இலங்கை அரசு சீனா, இந்தியா, ஜப்பான், பிரான்ஸ், சீனா போன்ற நாடுகளிடமும் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி பேன்ற பெரும் நிதி நிறுவனங்களிடமும் கடன் பெற்றுள்ளது. அது தவிர உள்ளூர் வங்கிகளிடமும் பிணை முறிகள் மூலமாக தனிநபர்கள் அல்லது நிறுவனங்களிடமும் கடன் பெற்றுள்ளது. இந்தக் கடன்களை அதன் வட்டியுடன் காலாண்டுக்கு ஒரு தடவை அல்லது அரையாண்டுக்கு ஒரு தடவை அல்லது வருடாந்தம் அது திருப்பிச் செலுத்தி வருகின்றது.

2022 இறுதிப் பகுதியில் இந்தக் கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாது என்று இலங்கை அரசு அறிவித்தது. இதனால் இப்போது இரு தரப்புப் பெரும் கடன் வழங்குநர்களின் கடன்கள் எவையும் திருப்பிச் செலுத்தப்படவில்லை. இலங்கை மீண்டும் இந்தக் கடன்களைத் திருப்பிச் செலுத்த வேண்டும். அப்படிச் செலுத்துவதற்கு இலங்கை அரசின் கைகளில் பணம் இல்லை. பொருளாதாரம் மீட்சி பெற்று வளர்ச்சியடைந்தால் மட்டுமே அது சாத்தியமாகும். அதற்கு இந்தக் கடன்களில் ஒரு பகுதியை விட்டுக்கொடுத்தும் எஞ்சிய கடன்களைச் செலுத்துவதற்கான கால அவகாசத்தை இன்னும் அதிகரித்து, அதன் மூலம் மீளச் செலுத்தும் தொகையைக் குறைத்து இலங்கையின் வருடாந்தச் செலவைக் குறைப்பதன் மூலம் பொருளாதாரத்திற்கு உதவுவது போன்ற நடவடிக்கைகள் தேவை.

அதை எப்படிச் செய்வது எவ்வளவு கால நீடிப்பு வழங்கு–வது என்பது தொடர்பில் அனைத்துத் தரப்புகளும் ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்து அறிவிக்கவேண்டும். இதில் ஒரு தரப்புக்கு அதிகமாகவும் இன்னொரு தரப்புக்கு குறைவாகவும் விட்டுக்கொடுப்புக்கள் இருக்கக்கூடாது என்று அனைத்துத் தரப்பினரும் கருதுவதால் இந்த முடிவுகள் ஒன்றில் ஒன்று தங்கியுள்ளன. அதனால்தான் இந்த முடிவை எட்டுவது சவாலான பணியாக இருக்கின்றது.

இலங்கை இந்தப் பணியை முடிக்காமல் அதன் பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கை விரைவாக மீள்வதற்கு விரைவான கடன் மறுசீரமைப்புத் தீர்வு விரைவாகத் தேவை என்று சர்வதேச நாயண நிதியத்தின் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் கென்ஜி ஒகாமுரா தெரிவித்துள்ளார்.

ஆக, கடன்மறுசீரமைப்பு இல்லாமல், வெடிகொழுத்தி கொண்டாடிய செலாவணி நிதியத்தின் நீடித்த கடன் உதவியினால் பொருளாதார மீட்சி வந்துவிடாது என்பது வெளிப்படை. இலங்கை இன்னும் முக்கியமான தடையைத் தாண்டவில்லை. அதனை வெற்றிகரமாகத் தாண்டினால்தான் நாடு மீட்சி அடையுமா இல்லையா என்பது தெரியவரும். புவிசார் அரசியல், வல்லரசுகளின் மோல் என்பவற்றுக்கு மத்தியில் கடன்மறுசீரமைப்புப் பணிகளை முன்னெடுப்பது இலகுவானதல்ல என்கிறபோது, இனி வரும் ஒரு மாத காலத்திற்கும் மேலான காலம் மிக மிக முக்கியமானது.

# எதிர்ப்பை அடுத்தே தமிழுக்கும் இடமளித்த சிறி லங்கா கிரிக்கெட்

தமிழ் மொழியை புறக்கணித்த சிறி லங்கா கிரிக்கெட் நிறுவனத்திற்கு கடும் கண்டனங்கள் எழுந்துள்ளன.

இந்நிலையில் தமது முடிவை மாற்றி தமிழிலும் வாழ்த்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ், சிங்கள புத்தாண்டு தினமான வெள்ளிக்கிழமை, சிங்கள் மற்றும் ஆங்கிலம் மொழிகளில் மட்டுமே வாழ்த்து தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து தமிழர் தரப்பினால் கடும் கண்டனம் வெளியிடப்பட்டுள்ளன நிலை யில், தமிழ் மொழியும் இணைந்த வாழ்த்தை ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் வெளியிட்டுள்ளது.

அண்மைக்காலமாக தமிழையும்தமிழர்களின்அடையாளத்தையும் சிதைக்கும் வகையில் இலங்கை அரச இயந்திரம் செயற்பட்டு வருகிறது. இலங்கையின் தேசிய மொழிகளில் ஒன்றாகத் தமிழ் பிரகடனம்செய்யப்பட்டுள்ளது. எனினும்பலஅரசகாரியங்களின் போது தமிழ் நிராகரிக்கப்பட்டு வருகிறது. இலங்கையின் தேசிய சுதந்திர தினம் முதல் பல இடங்களில்தமிழ் முற்றாக நிராகரிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இலங்கை முழுவதும் தமிழ், சிங்கள புத்தாண்டை மக்கள் கொண்டாடி வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் இலங்கை கிரிக்கெட் நிறுவனம் வெளியிட்ட வாழ்த்து செய்தியில் தமிழ் முற்றாக அகற்றப்பட்டுள்ளது.

அரச நிறுவனம் சார்ந்த எந்தவொருவிடயத்திலும்தமிழ் இருக்க வேண்டும் என்பது அரசியல்யாப்பாகும். எனினும் திட்டமிட்ட வகையில் தமிழ்மொழி நிராகரிக்கப்பட்டிருந்தது.

இலங்கை அணிக்கு பல இலட்சம் தமிழ் ரசிகர்கள் உள்ளனர். இவ்வாறான நிலையில் ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் செயற்பாடு ஒட்டுமொத்த தமிழ் மக்களை அதிருப்திஅடையவைத்துள்ளமைக்கு எழுந்த கண்டனங்களை அடுத்து அது தனது முடிவையும் மாற்றி தமிழுக்கும் முன்னுரிமை வழங்கியுள்ளது.

# மோ. சைக்கிளில் பயணித்தவர் துப்பாக்கியால் சுட்டுக் கொலை

## அவருடன் பயணித்த இரு சிறுவர்கள் காயம்

அஹங்கல்ல மித்தரமுல்ல பிரதேசத்தில் வெள்ளிக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளந்தெரியாத இருவர், மற்றுமொரு மோட்டார் சைக்கிளில் பயணித்தவரை துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி பலத்த காயமடைந்த மோட்டார் சைக்கிள் சாரதி சிகிச்சைக்காக பலப்பிட்டிய ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்தார்.

சாரதிசுடப்பட்டதைஅடுத்து மோட்டார் சைக்கிள் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதாகவும் அதில் பயணித்த இரண்டு சிறுவர்களும் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்கப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

உயிரிழந்தவர் அஹங்கல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடையவர் என்பதுடன், பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கடலலையால் படகு தூக்கி வீசப்பட்டதில் ஒருவர் காயம்; சிலர் நூலிழையில் தப்பினர்

## களுதாவளையில் சம்பவம்



சித்திரை வருடப்பிறப்பான வெள்ளிக்கிழமை மாலை மட்டக்களப்பு மாவட்டம் களுதாவளைக் கடற்கரையில் அதிகளவு மக்கள் தத்தமது குடும்பத்தினருடன் மாலைப் பொழுதைக் கழித்திருந்தனர்.

இந்நிலையில் இளைஞர்கள் சிலர் அக்கடலில் என்ஜின் பொருத்திய சிறியரக படகு ஒன்றை மிகவும் வேகமாக ஓட்டினர்.

இதேவேளை கடலில் படகை ஓட்டிய இளைஞர்கள் அப்படகை சற்று நேரத்தில் கரைசேர்த்திருந்தனர்.

பின்னர் மீண்டும் கடலில் படகை இறக்குவதற்குத் தயாரான நிலையில் அதில் கடற்கரையில் நின்ற இன்னும் சில ஆண்களும், பெண்களும் ஏறினர்.

பின்னர் படகை கடலுக்குள் நகர்த்திய இளைஞர்கள் இயந்திரத்தை இயக்க முற்பட்ட வேளை அது இயங்கவில்லை, பல முறை முயன்றும் படகில் குறித்த இயந்திரம் இயங்கவில்லை.

சிறிது நேரம் கரையிலிருந்து சற்று தொலைவில் படகு தத்தழித்துக் கொண்டிருந்தது. பின்னர் பொங்கிவந்த கடலலையில் படகு கரையைநேக்கி தூக்கி வீசப்பட்டது.

இதனால் படகிலிருந்த ஆண் ஒருவர் கீழே விழுந்துள்ளார். அவருக்கு மேலே அக்குறித்த படகு வீழ்ந்துள்ளது. இதனால் அவர் காயமடைந்த நிலையில் கரையில் நின்றவர்களால் மீட்கப்பட்டார்.

கரையை நோக்கி படகு அலையால் தூக்கி வீசப்பட்டத்தில் படகிலிருந்த ஏனையஆண்களும்,பெண்களும்,மிகவும் தெய்வாதீனமாக கரையிலிருந்தோரால் காப்பாற்றப்பட்டனர்.

இதில் பாதிக்கப்பட்டவரை மீட்டு உறவினர்கள் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

இதனால் ஏற்படவிருந்த பாரிய அனர்த்தத்தில் தெய்வாதீனமாக அனைவரும் காப்பாற்றப்பட்டனர் எனக் கரையிலிருந்த மக்கள் தெரிவித்தனர்.

# வெலிகமவில் இளைஞனை அடித்துக்கொன்ற இரு சிறார்கள் உட்பட அறுவர் கைதாகினர்

வெலிகம கலகந்த கொலந்தந்த பிரதேசத்தில் வீதியில் சென்று கொண்டிருந்த இளைஞர் ஒருவரை அடித்துக் கொன்ற குற்றச்சாட்டின் பேரில் இரண்டு சிறார்கள் உட்பட ஆறு பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர் என வெலிகம தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு சகோதரர்களும் அடங்குகின்றனர் என வெலிகம தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

நண்பர்களுடன் வீதியில் சென்று கொண்டிருந்தபோது பெண் ஒருவருடன் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றியதையடுத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பெண் கொடுத்த தகவலின் பேரில் அவரது இரண்டு மகன் கள் உட்பட சிலர் வந்து அந்த இளைஞனைக் கொடூரமாகத் தாக்கினர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் அவரது இரண்டு மகன்களும் அடங்குகின்றனர் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# கடன் மறுசீரமைப்பு தொடர்பான பேச்சை தொடங்குவதாக பாரிஸ் கிளப் அறிவிப்பு

இலங்கையுடன் பேச்சுகளை ஆரம்பிக்கதிட்டமிட்டுள்ளதாக பாரிஸ்கிளப் தெரிவித்துள்ளது.

இலங்கைதொடர்பானகடன்வழங்குநர்கள் குழு ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ள நிலையிலேயே பாரிஸ்கிளப் இதனைத் தெரிவித்துள்ளது.

ஜப்பான் இந்திய நிதியமைச்சர்கள் இலங்கை ஜனாதிபதி அதன் பிரதிநிதிகளுடன் இணைந்து வியாழக்கிழமை இலங்கைக்கு கடன்வழங்கியவர்களின் குழுவை ஏற்படுத்தியுள்ளனர் என பாரிஸ் கிளப் தெரிவித்துள்ளது.

கடன்வழங்கியவர்களின் குழுக்கள் எதிர்கால கடன்நிவாரண உடன்படிக்கைக்கான வழிமுறைகள் தொடர்பான பேச்சுகளுக்கு தலைமை வகிக்கவுள்ளன.

தற்போதைய உத்வேகத்தைத் தொடர்ந்து தக்கவைப்பதற்கு விரும்புவதாகத் தெரிவித்துள்ள பாரிஸ்கிளப், நியாயமான கடன்சுமை பகிர்வு, வெளிப்படைத்தன்மை ஆகியவற்றை உறுதி; செய்வதற்காக அனைத்து பங்குதாரர்களுடனும் ஒருங்கிணைந்து கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவுள்ளதாக தெரிவித்துள்ளது.